கிறிஸ்தோபகாரி.

THE CHRISTIAN FRIEND.

Vol. III. No. 4. சித்திரை மாதம். 1873.



MOUNT LEBANON.

லிபானேன்மலை.

வேதாகமத்திற் சொல்லப்பட்டிருக்கும் மலைகளுக்குள் லிபானேன் முக்கியமானது. சீரியாவிலுள்ள மலைகள் எவற்றிலும் அதி உயரமானதும் கிலகாரியங்களில் மிகவும் பேர்பெற்றதும், ஓர் தனிமலையாகாது தொடர்புகொண்டதாயிருக்கின்றது. நீறு கோபத்துக்குச் (Tyre.) சமீபமாய்ப் பெருஞ்சமுத்திரவோரத்தில் அதுதொடங்கித் தொண்ணூறுமைல்தூரம் வடமேற்காய்ச் செல்லுகின்றது. இம்மலைத்தொடர்பின் உயரம் சுமு அடிதொடங்கி, அதும் அடிவரைக்கிருக்கும். அதில் அதிக உன்னத சிகரங்களில் ஒன்று ஒன்பதினாயிரம் அடியும், மற்றது பதினாயிரத்தைந்நூறு அடியும் உயரம்.

இம்மலைத்தொடர்பின் திருத்தூபமதிலே பன்னாக்காசென்னிறை ...

க்கப்பட்டிருக்கும் பின்னொருதொடர்புண்டு. அதற்கு முற்காலத்திலே சூரியோதயத்துக்கு எதிர்ப்புற லிபானேன் என்றும் (யோசு. 13: 5) தற்காலத்திலே எதிர் லிபானேன் (Anti Libanus) என்றும்பெயர். இவ்விரு மலைத்தொடர்புகளுக்கிடையேயுள்ள பள்ளத்தாக்கு எழெட்மைல் அகலங்கொண்டது. வேதாகமத்திலே இதற்கு "லிபானேன் பள்ளம்" (யோசு. 11: 16.) என்பெயர். இப்பள்ளம் அம்மலையின் அந்தம் வரைக்கும் சென்று அதிலிருந்து கிழக்கிலும் மேற்கிலும் வெளிநாட்டுக்குள்ளாக வீசாலித்துச்செல்லுகின்றது. இவ்விடத்திற்கு ஆமாத்தின் பிரவேசம் (யோசு. 13: 5. எண். 34: 8.) என்றுபெயர்.

லிபானேன் என்பதற்கு வெண்மையென்று அருத்தம். வருஷத்தின் மிகுதியானபங்கில் இம்மலைச்சிகரத்தை மூடியிருக்கும் உறைத்தமழையினால், அல்லது அம்மலைமேலிருக்கும் கண்ணுறும்புக்கற்களின்வெண்ணிறத்தினால் இந்நாமம் அதற்கிடப்பட்டது போலும். இம்மலையின் மேலானபகுதிக்குச் சற்றேனும் பசுமையில்லாது சிறுச்சிறுக் கண்ணுறும்புக்கற்கள் பரவண்டிருக்கும். இக்கற்கள் இடைக்கிடை கும்பங்களாகவும், கிரங்களாகவும் ஓங்கும். ஊடேயூடே சடைத்த விருட்சங்கள் அருமையாகத்தோன்றும்.

இம்மலை ஆறாயிரம் அடி உயரம் வரையிற் செங்குத்தாயுண்டிருக்கும். இதற்குக் கீழே மேற்குப்புறச்சாரின் தோற்றம் மிகவித்தியாசங்கொண்டது. படிப்படியான இறக்கங்களில் இங்குமங்கும் இடைக்கிடை செங்குத்துகளும் உயர்ந்தமேடுகளுமுண்டு. அலை பார்க்கப்பார்க்க, அதிநூதனதோற்றங்களும் சாயல்களுமுள்ளனவாய்க் காணப்படும். மலையடிவாரங்களிலெல்லாம் பாலான கணவாய் அல்லது வாய்க்கால்களுண்டு. அவைகள் பார்வைக்குப் பெரும்பெரும்பிளப்புகளாய்த் தோன்றும். ஊடேயூடே உன்னதமானன் கிம்பி நிறுநிட்டமாய்ப் பெருஞ்சமுத்திரத்துட் பாய்ந்துகொண்டுகிடக்கும். எப்படியிருப்பினும் வசதியான இடங்களிலெல்லாம் பயிர்ச்செய்கையுண்டு. அப்பயிர்ச்செய்கையுமோ மிக ஆச்சரியமானது. நெருக்கமுத்தானியங்கள் கில காணப்படுமிடங்கள் பலவற்றைக்கவனிக்கும்போது, ஆ! மனுஷன் இங்கே எப்படிவருவான். இவ்விடம் வட்டமிட்டுப் பறக்கும் கழுகுப்பார்வை தானே இவற்றை விதைத்தனபோலும் என்றுசொல்லவேண்டியிருக்கும். வேறுங்கல்மேலேகல்மேல் அத்திவாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒடுக்கமானகளம் அல்லது முரம்புகளிற் கிராட்சக்கொடிகள் காட்டப்பட்டிருக்கும். மேல்லிட்டப்படிகளுக்கொப்பான மலைப்படிகள் எங்கும் முகக்கட்டைச்செடிகள் காட்டப்பட்டிருக்கும். மலையடிவாரங்களெல்லாம் ஒலிவவிருட்சத்தோப்புகள். மலைப்பிளப்புகளின் பக்கங்களிற் குருவிக்கூடுகள்போல் மலையைச்சுற்றி நாற்றுக்கணக்கான ஈராமல்களுண்டு.

சுண்ணாம்பு வெளிப்புக்கொண்ட விடியற்காலத்திலே கடலிலிருந்து பார்க்கும்போது, லிபானேன் தோற்றுங்காட்சி ஒருவன் மனசைவிட்டு ஒருபோதுங் குடிபோகாது. இக்காட்சியிலும், மலைமேலேகின்று கீழே அலங்காரமான பள்ளத்தாக்குச்சேர்ந்த மலை அடிவாரத்தின் மேலாக வீசாலமும் பிரவையுமுள்ள பெருஞ்சமுத்திரத்தைப் பார்க்குங்காட்சி ஒருவன் மனசில் மிக ஆழமாய்ப்பதியும். இந்த மேலானகாட்சிகளெல்லாம் "இஸ்ரவேல் இவன்புஷ்பத்தைப்போல மலருவானாகவிபாரனானபோல வேர் ஊன்றி நிற்பான்."

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாய்த் திருட்டாந்தப்படுத்துகின்றன. கோடைகாலத்தின் முற்கூற்றிலே புட்பிக்கும் நிராட்சக்செடியின் வாசனையும், வருஷமுழுவதும் மலரும் கணக்கற்ற வாசனைப் பூண்டுகளின் சுறுமணமும் கலந்து இம்மலையிலிருந்து வீசும் இளங்காற்று "உன்வஸ்திரங்களின் வாசனை லிபானோனின் வாசனைக்கொப்பாயிருக்கின்றது." (உன்ன. 4: 11. ஓசி. 14: 6.) என்ற வாக்குகளை ஞாபகப்படுத்துகின்றது.*

பலஸ்தீனாட்டின் மைதானங்கள் அதோரவெயிலிற் நிய, அவைகளின் பரமாணு ரூவையின் அனல்போலிருக்க, லிபானோனின் உறைந்தமழை படிந்தசிகரங்களும் பனிக்கட்டிபோற் குளிர்ந்த நீரோட்டங்களும், இளங் காற்றைக் குளிரப்பண்ணி மலைப்புறங்களை மனுஷருக்கு உவப்பும் பிரியமான தங்குமிடமாக்கும். "லிபானோனின் உறைந்தமழை வயல்வெளியின் கன்மலையிலிருந்து அற்றுப்போறதுண்டோ! ஓடிவருகிற அந்நியதேசத்துக் குளிர்ந்த தண்ணீர்கள் வடிந்துபோகிறதுமுண்டோ!" (எரே. (18 : 14.) என்ற எரேமியாத்தீர்க்கதரிசி சொல்லியது இதனுல் விளக்கமாகிறது. இக் காலத்திலும் இம்மலைப்புறங்களெங்கும் நிராட்சக்கொடி காட்டப்பட்டிரு க்கிறது. அப்பகுதி முந்திரிகைசாகம் அதிகரித்திருக்கிறது. (ஓசி .14: 7.) நிராட்சக் கொடிகளாலன்றி லிபானோன்மலை ஓலிவவிருட்சம், அத்திமரம், முசுக்கட்டைச்செடிகளாலும் செழிப்புக்கொண்டது. மூற்காலத்தில் இம் மலையைச் சிறப்பித்த பயன், கருவாலி, கேதுரு விருட்சங்கள் (ச. இரா. 5: 8. சங். 29: 5. எசா. 14: 7. எஸ்ரு 3:7.)இக்காலத்திலும் மிதிருக்கின்றன. இம்மலைகளின் ஒதுங்கிடங்களும் உயர்ந்த கொங்களும் கரிகள், கோளுப் கள், கரடிகள், கடுவாய்கள், வேங்கைகள் என்னும் பலகாட்டுமிருகங்களு க்கு உறைவிடமாயிருக்கின்றன. (உ இரா. 14: 9. உன்ன. 4: 8. அப. 2: 17.)

எர்மோன்மலை.

இம்மலை "சூரியனுக்கெதிர்ப்புற லிபானேன்" மலைக்குத் தென்புறத்திலுள்ள அதின் உன்னதமானசிகரம். இதின்உயரம் பதினுயிரம அடி. பலஸ்தீன் அல்லது சிரியதேசத்திலுள்ள மலைகளுக்குள் இம்மலையுலம்பரமானதும், அதி றைப்புற்றதுமாயிருக்கின்றது. எர்மோன்என்றதற்கு உன்னதமேலானசிகரம் என்றுபொருளாதலாற்,தூரத்தில் காணப்படும் அதன்தோற்றத்தையிட்டு இப் பெயர் அதற்குக்கொடுக்கப்பட்டதுபோலும். சீதோனியர்இம்மலைக்குச் சிரியோனென்றும் எமோரியர் சேனீர் என்றும் பேரிட்டார்கள். இவ்விருசொ ற்களுக்கும் மார்புக்கவசமென்று அருத்தம். இம்மலைச்சிகரத்தைமூடிய உறைந்த மழைமேற் சூரியகிரணங்கள் வீழ்ந்து எதிரொளிவீசுகும்போது, அதின் கொடுமுடிவட்டித்துத்தோன்றுகாரணத்தால் இக்காமங்கள் இதற்கு க் கொடுக்கப்பட்டன என்ற உத்தேசிக்கவேண்டும். (உபா. 3: 9. உன்ன. 4: 8. எசே. 27: 5.) இன்ரவேற்தேசத்தின் வடக்குக்கு இந்த மலையே மேல்

---

* கேதுரு மரத்தின் காய்களிலிருந்து அதிவாசனையான பிசின் பொசிகின்றது. அக்காய்கள் சிலவற்றைப் பிடுக்கித் தன் அறையிற் தூக்கிவைத்த பிரயாணியொருவர், அனேக சிறமைகளின்பின் தன்னறைக்குவந்தபோகுல் ஒவ்வொருவரும் அந்த அறையை நிரப்பியசுகந்தத்தைக் குணித்தார்களென்று எழுதியிருக்கிறார். "லிபானேனின் வாசனை."

வில்லை. (உபா. 3: 8; 4: 47. யோசு. 11: 16.) இதற்குரிய நியாயம் வெளிப்படை. பலஸ்தீனுநாட்டின் எத்தப்புறத்தில் நின்றும் இஸ்ரவேலன் ஒருவன் தன் கண்ணை வடதிசைக்கு நேடுத்துப்பார்ப்பானுகில் இந்த எர் மோன்மலையே சாட்சிக்கு அத்தமாய்த்தோன்றும். கரைமார்க்கமாய் மைதான த்தில் நின்றும், சமாரியமலையில் நின்றம், யோர்தான்பள்ளத்தாக்கில் நின்றும், மோவாபு, லியாத்தின் உயரத்தில் நின்றும், பாஷானின் வெளியில் நின்றும், பார்க்கில் உறைந்தமழைக்கிருப்பிடமாய் வெளிறின நீலநிறங்கொண்ட அந்தச்சிகரமே வடக்கெல்லையாகத்தோன்றும். மற்றும் சுற்றப்புறநாடு களோ வரட்சியடைந்திருக்கவும், ஆகாயம் முகில்களின்றியிருக்கவும், இம்ம லைச்சிகரத்தின்மேலுள்ள உறைந்தமழையானது கோடைகாலத்திலே பரமா னுவின்மேல் உலாவும் நீராவிகளை அமரச்செய்து, மெல்லிய முகிற்படலங் களை அச்சிகரத்தைச் சுற்றி வட்டமிடப்பண்ணி அதின்மேற் பனியாக மிகு தியாகப் பொழியப்பண்ணுகிறது. எர்மோனின் பனியை ஞான ஆசீர்பாதங் களுக்கு அடையாளமாய்ச்சொல்வதுஇக்காரணம்பற்றுகின்றது.(சங்.133: 3.)

லிபானேனின் கேதுருவிருட்சங்கள்.

சலோமோன் தேவாலயக்கட்டின நாள் தொடக்கமாய் லிபானேன் மலை கேதுருவிருட்சங்களால் பேரெடிப்புக்கொண்டது. இரைவேற்சனங்கள் கா னுன்தேசத்துக்கு வரமுன்னமே ஏரஸ்மரங்கள் சுத்தம்பண்ணுவதற்காக அற் பசொற்பமாய்ப்பாவிக்கப்பட்டனவென்று சொல்லப்பட்டிருக்கின்றதன்றி, (லேவி. 14: 6. எண். 19: 6.) கட்டுவேலைக்காகப் பாவிக்கப்பட்டதாய் சொல்லப்பட்டிருக்கவில்லை. எம்மூரிலே சர்தனமரம் அருமையாய்ப் பாவிக்கப்பட்டாற்போல, இக்காலத்திலும் நெய்சிறப்பெட்டிகள் செய்வத ற்கான அல்லது வேறுசிலபாவிப்புக்காக கேதுருமரத்தை அதிக அருமையுட ணி விற்பனைக்குக் கொண்டுபோகிறார்கள். இஸ்ரவேலருக் தங்களுக்கு வே ண்டிய அருங்காரியங்களுக்கு அன்றி, மற்றும் பெரும் வேலைக்காக அதைப் பாவித்துவரவில்லை. உடம்படிக்கைப்பெட்டியும் கூடாரத்தின் மறுபகுதி களும் தெற்றிமரத்தால் உண்டாக்கப்பட்டது. இத்த மரம் இத்த வேளை யிலும் சீன வனாந்திரத்தில் மிகுதியாயிருக்கிறது. அக்காலத்தில் அவர்களுக் கு அகப்படக்கூடியதாயிருந்ததும் இச்சித்தீம்மரமே. கானனுக்கு அவர்கள் வந்தவுடன் அம்மரப்பாவிப்பு அற்றுப்போக, கேதுருவிருட்சங்களும் ஒலிவ விருட்சங்களுமே அவர்களுக்குப் பாவிப்பாயின. வேதசரித்திரம் மெய் என்பதற்கு இதுவுமோர்சாட்சியே. கேதுருவிருட்சம் அங்காட்டின் கட்டுவே லைக்குரிய விசேஷித்தமரம். வைரமற்றமரங்களைப் புழு, முதலியவைகள் அரித்துவிடும். மழைகாலத்திற் காய்வாரத்திற் பொசியும் தண்ணீரின் ஈரத் தால் மற்றுமரங்கள் சடுக்கு உக்குகின்றன. கேதுருமரமோ அப்படியா காது, வைரமும் பிணுமுள்ளதினுல் நெடுங்காலத்தக்கிருக்கும். இம்மரங் கள் முற்காலம்போல் ஏராளமில்லாதிருப்பினும் இக்காலத்திலுமுண்டு. சில மரங்கள் அனேகநூறாண்டுகளாகநிற்கின்றன. போய்அளந்துபார்த்தோர் சிலர் மற்றும் பெரியமரங்களுக்குள் இருபத்தேழடி சுற்றளவுள்ள ஓர்மரம் நிற்கிற தாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRIEF SKETCH OF THE WESLEYAN MISSION CEYLON.

இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களிலுள்ள வேஸ்லியன் மிசியோன் சரித்திரப்போழிப்பு.

மட்டுக்களப்பு.—சோக்குப்பண்டிதரின்தேகவியோகத்தால் "மந்திரியில்லாவாசல் மதகளிறில்லாவெம்போர்—சக்கிரனில்லாவானத்தாமரையில்லாப் பொய்கை—தந்திரியில்லாவீணை தனமில்லாளிழையன்றே—விந்திரைகேள்வனெங்களிராமனில்லாதசேனை" எனச்செய்வதியாதென அறியாதராய்த்திகைத்துநின்ற வேளைய குருமார்,பிரார்த்தனை வழியாய்த்தேவருள்பெற்று ஒருவர் மாத்துறைக்கும், மற்றொருவர் காலிக்கும், வேறிருவர் கொழும்பு யாழ்ப்பாணங்களுக்கும், இன்னுமொருவர், மட்டக்களப்பிற்குஞ் சென்றனர். மட்டக்களப்பிற்குச் சென்றவரே, கனம். ஆல்ற்று ஐயர். (Read Mr. Ault.)

1814 ம் ஆண்டிற்றான் மட்டக்களப்பில் தேவபணிவிடை ஆரம்பமானது. இங்கேயும் மூர்த்தமூர்த்தமொரு பள்ளிக்கூடத்தைத் துவக்கினர். இதில் காற்பது பிள்ளைகள், கல்வியோடு வேதங் கற்கலாயினர். பதவிக்கார, ஜரோப்பிய இராணுவவீரரில்நின்று இருபதபேரைச் சபையாகச் சேர்த்தார். அந்த சந்நிதைமாசத்தின் முதல்வாரத்திலே இவர் பரகதியடைந்தார். இதன்பின் காலத்திற்குகாலம் பற்பல குருமார் இந்த ஸ்தானத்தில் தேவ ஊழியஞ்செய்துவந்தார்கள். 40ம் ஆண்டுவரைக்கும்,யாதாயினும்விசேஷசம்பவங்கள் இங்கே நடந்ததாய்க் காணவில்லே. அதன்மேல் அஞ்ஞானிகளுக்குள்ளும் தேவஆவி இரியை செய்ததாய்க் காண்கிறோம். அனேகர் மனந்திரும்பிக் ஞானப்பட்டார்கள். ஒரு அஞ்ஞான வாலிபன் முதலியாரினது மகள் விசாகஞ்செய்யும் பொருட்டாய் மாத்திரங் நிறிஞ்சவளுக வேஷந்தரித்தான். ஆயினும் மனப்பரத்தியோடு சகல அஞ்ஞானக் கிரியைகளையும் பசாசின் ஆலயத்தில் டைப்பித்துவந்தான். ஆயினாலும் தேவன் அவனிலும் பிரவேசிக்க, அவனும் மனந்திரும்பி மெய்க்கிறிஸ்தவனானான். பிதாவானவன் இதுகாரியத்திற் பிரியவீனமாய்ப் பலகாரியங்களை டைப்பித்தும், அவன் மாதாவும் மனந்திரும்பிக் நிறிஞ்சவளானான். வாலிபன் ஒரு வயிராக்கியமுள்ள பிரசங்கியானான். சுவிசேஷ வாக்கைக்கேட்ட அனேகர் மனந்திரும்பி விசுவாசிகளானார்கள். வாசர அஞ்ஞான மார்க்கமும் அதன் கிரியைகளும் பலராலும் இகழப்பட்டன. கச்சேரி முதலியாரும் மக்கள் மருமக்களுக் தேவபணியிற் கையிட்டார்கள்.

1840 ம் ஆண்டில் இங்கேயிருந்த சபையாரின் தொகை, 28. 41 ல், 42. 42 ல், 90. 43 ல், 127. 44 ல், 147. 45 ல், 177. இவ்வகையே வருடத்திற்குவருடம் வளர்ந்துவந்தமன்றிக் கடைசிவருடமாகிய 45 ல், 137 பெயர் சபையிற் சேருதற்காய்ப் பிரயத்தனித்தும் வந்தார்கள். இங்குள்ளாரின் பயபத்தி பெரும்பாலும் மெச்சிடத்தக்கதன்றி மற்றம்படியல்ல. இவர்களுக்குள் கச்சேரிமுதலியாரே சிரேஷ்டன். இவரது இதயம் மிகச் சுத்தமானது. நீடியபொறை, சாத்தந், தயாளம், இச்சையடக்கம், காருண்ணியம் முதலிய நிறைந்த இலட்சணங்களெல்லாம் நிறைந்தமார்க்கம் போதிக்கும் அன்போடு இவர் தமக்கணிலமாய்க் கொண்டிருந்தார். "தேவனுக்குப் பயப்படுகிறவர்கள் யாவரும் இவருக்காவிபோன்ற னேகராயிருந்தார்கள். அஞ்ஞானத்திற்கும் அதன் கிரியைகளுக்கும் ஓர் பக்காதகி

போலாவார். வரவரச் சபை வர்த்தித்துப் பெருகியது. சுவிசேஷத்தைப் பேரிப்பதில் பலர் முயன்றார்கள். காலுவருடங்களின் முன்னர் அஞ்ஞா னம் நிறைந்த இத்தக்காடு மெய்ஞ்ஞானப்பயிர்களால் வரவரப் பிரகாசங் கொண்டது. இங்கே தேவன் கடப்பித்த யாவையுங் கண்டோர், கேட்டோர், தேவனைத் துதித்தார்கள். இவ்விடத்தில்வந்த நடந்த சம்பவங்களைக் கண் ணாரக்கண்ட, தெய்வபத்தனும் வேதாகியுமாகிய கனம். தானியேற் பூர் மட்டுக்கழற்பென்னும் இந்த சுகாதத்திலே பிரகாசிப்பதைக் கண்டேன்." அது கள் விசுவாசம் உலகமெங்கும் பிரஸ்தாபமாகிறபடியினாலே உங்களுட னே காணும் அதுதலடையும்படிக்கு, மட்டுக்கழப்பாரே! உங்களைக்காண வாஞ்சையாயிருந்தேன். அதற்காகவே இங்கே வந்தேன். நீங்கள் நற்குண த்தால் நிறைந்தவர்களும் சகல அறிவினாலும் (விசேஷமாய்ச சிலுவையின் ஞான அறிவினால்) நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொ ல்ல வல்லவர்களுமாய் இருக்கிறீர்கள்" எனக்கண்டு, என் தேவனுக்கு ஸ்தோ த்திரஞ் செலுத்துகிறேன்" எனப்பேசிப் பிரசங்கித்து இவர்களைக் குறித்துச் சாட்சிபிட்டார்.

இருவுள்ள இரண்டு தினங்களில் தேவன் விசேஷ கிரியைகளை கடப்பி த்தார். முழுவதும் அஞ்ஞானிருளால் மூடப்பட்டிருந்த ஒரு கிராமத்தில் நூற்றாண்டுபெயர் கிறிஸ்தவர்களானார். மற்றவர்களோ, நாற்பத்தைந்துபெயர் கிறிஸ்தவர்களானார். இவ்விடத்திலுள்ள அஞ்ஞானக்கோவில் அழிக்கப் பட்டதுமாத்திரமா? அதில் வசித்த யக்ஷிரகமுந் தகர்க்கப்பட்டது. அடுத் த மெய்த்தேவனுக்கொரு பிரார்த்தனைக்கான இடமும் கட்டப்பட்டது. தேவனுடைய பெட்டிக்கு முன்பாகத் தாகோன் விழுந்துகிடந்த பான்மை யே, அஞ்ஞானப்பேயுஞ் சிலுவையின் ஞானப்பிரசங்கத்தால் அபசெயப் பட்டது. அடர்ந்து படர்ந்த காட்டின் நடுவே கட்டப்பட்ட இந்த ஆலயத் திலும் அக்கம் பக்கத்திலுள்ளோர் வந்து கர்த்தரின் நாளில் சேருவார்கள். ஆற்றுக்கும் கடலுக்கும் நடுவே அங்குள்ள இருபதுமைல் தூரமான இட ங்களில் அஞ்ஞானிகளும், மகம்மதியரும் வாசஞ்செய்வார்கள். இக்கிராம ங்கள் யாவிலுஞ் சுவிசேஷம் முறையே கூறப்படுவதுண்டு. அஞ்ஞானிக ள் பிரசங்கத்திற் தெரிவிக்கப்பட்டிருந்தும் அறிவற்ற மகம்மதியர் மாறுன குண ங்காட்டுவதும் எதிர்ப்பதமுண்டு.

அமெரிக்காவென்றொரு கண்டமிருக்கிறதாய்ப் பலகாலம் ஐரோப்பியர் அறியாதிருந்தாற்போல, மட்டுக்கழப்பச்சார்ந்த நடுகாடுகளில் வசித்த வேடரும் அறியப்படாதிருந்தார்கள். இவர்கள் மிருகத்தன்மையை உடை யவர்கள். இவர்கள் மிலையாம் வீட்டில் வசிப்பவர்களல்லர். இவர்கள் மர ங்களிலும் குகைகளிலும் வசிப்பார்கள. கந்தமூலங்களும் வேட்டையா டின காட்டுமிருகங்களுமே இவர்கள் போசனம். இவர்கள் இப்பிற் சற் றிய தண்டுச்சேலையே இவர்கள் உடை. ஏகதேசத்துக்கிவர்கள் கண்ணோடி த்தவர்கள். இவர்களே முந்தமுந்தப்போய் கனம். ரெடுபேட்சையர் தரிசி ருக்குங் கண்மைசெய்ததும் சுவிசேஷவார்த்தை இவர்களுக்குறிவிக்கப் பிரயத்

லங்கள் சமைக்கவும், வேளாண்மைக்குதவிசெய்யவும் கருதி, அரசாட்சியார் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தார்கள். இவர்களுக்கிப்போ சுவிசேஷத்தைக் கூறவொரு சிங்கள உபதேசி அங்கே வசிக்கிறார். இவர்கள் கர்த்தரின்நாமே மட்டிடத்தாய்ப்பலவாறு படிப்பித்தும் பலிக்காததால், இவர்கள் சீலையில் எழுமுடிச்சுக்களையிட்டு நாளொன்றும் அவிழ்க்கப்படாதிக் கடைசிமுடிச்ச அவிழ்க்கும்காளை ஓய்வுகாளைக் கற்கச்செய்தார்.

1839 ல், மட்டக்களப்பிலொரு தேவாலயங் கட்டப்பட்டது. 1840 ல், பெண்களுக்கு ஞானத்தேர்ச்சி கொடுப்பதற்காயொரு சகோதரகூட்டம் வைக்கப்பட்டது. அமரர் அதிற் சேர்ந்திருந்தார்கள். பறங்கிக்காரருஞ், சுதேசிகளுந் தங்கள் பிள்ளைகளுக்கு இங்கிலிசுதமிழ் படிப்பிப்பதற்காய் ஒரு பள்ளிக்கூடங் கட்டப்பட்டது. இதிலே கல்விகற்ற ஆறுபையர்மனந்திரும்பிச் ஞானப்பட்டார்கள்.

1841 ல், காலமாசக்காலத்தில் இருபத்தாறுபையர் கிறிஸ்தவர்களானார்கள். இவர்களில் இருபத்திரண்டுபையர் அஞ்ஞானத்தை விட்டுவந்தார்கள். இத்தவருடச் சித்திரையிற்றானே தொண்ணூற்றிரண்டுபையர் கிறிஸ்தவர்களானார்கள். இவர்களேவிட, ஆடிமாசத்தில் நாற்றுகாற்பத்தாறுபையர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்களிற் தொண்ணூறுபையர் வேடர்கள். ஊர்த் தலைமைக்காரரிலுமொருவர் குணப்பட்டார். இவர் தன் செலவிலொரு பிரசங்க ஸ்தானத்தையுங் கட்டுவித்தார். இக்கே தேவ அருளேப்பெற்றத் தங்களே மனந்திரும்பிய வசனத்தூதரை, கச்சேரிமுதலியார், தலைமைக்காரர்யாவரும், பிரசங்கிகளாகவும் போதிக்கிறவர்களாகவும் வந்ததால், சுவிசேஷர் தன் சகல மாட்சிமைகளோடு பரம்பி, முழுப் புனிய நிலமும் அண்மையிலுள்ள அதன் கிராமங்களும், இந்தியாவிலுள்ள திருநெல்வேலிச் சில்லாவை கிளர்த்துக் கிறிஸ்தவர்களின் வாசஸ்தலங்களாய் மாறின. அவ்விடங்களிலுள்ள அதிகாரிகள், பிரபுக்கள், மெய்க்கிறிஸ்தவர்களுஞ் சன்மார்க்கருமாகவே, வேலையோரும் அவர்களேப் பின்பற்ற வைப்பட்டார்கள். எத்தேசத்தின் முறியோருங் கிறிஸ்தவர்களாய் மாத்திரமல்லாக், கிறிஸ்துவின் இராச்சியவிருத்திக்காய்ப் பிரயாசப்படுகிறவர்களாயும் வரும்போது, சுவிசேஷ இரதம் இருப்புப்பாதையின்மேல் தடையின்றி ஓடும்போரா விரதம்போலோமும், அப்படியல்லாக்காலத்தில்அதலேட்டம்சாதாரணதெருக்களிலும் செப்பனிலாத வரைகளிலும்லும் கரத்தைக்கொப்பாம்.

இக்காலத்திலோ மட்டக்களப்பில் மாத்திரமல்லப் பிறவிடங்களிலுஞ் சுவிசேஷவிருத்திக்கு, அதன் படர்தலுக்குச் சொழுகொம்புபோலிருக்க காட்டப்பட்டவர்கள்(ஆம் மிகியோனரிமாரிடங் கல்லிகற்றோர்), தடையாய் வருகிறதை மிகவும் துக்கத்தோடு காண்கிறோம். இவ்வித தாழ்வைக் கிறிஸ்தமார்க்கம் பரம்பியவரும் எல்லிடங்களில் இன்றும் நீக்கச், சபையின் கர்த்தரே நிருபைசெய்யவேண்டுமோம்.

இலங்கையின் எப்பகுதிகளில் இன்றும் மட்டக்களப்பில் தேவகிருத்தியம் விருத்தியாதற்கு அவ்வூழியத்தை நடத்தவேண்டிய பிரகாரமாய் நடத்தின கனம். ஸ்ரேறற் ஐயரது நடை, குணம், செய்கைகளும் மெய்ச்சிக்கொள்ளப்படத்தக்கவன்றி வேறல்ல. இவர் யாவராலும் வியக்கப்படத்தக்கவொரு வாய்ச்சாலகனல்லாவிடினும், ஒரு சுவிசேஷ போதகனுக்குரிய சகல குணகுணக்கேயும் உடையவராயிருந்தார். இவர் வாய்ச்சாலியல்லாவிடினும்

இவர்வாக்கு வல்லமையுள்ளதாயிருந்தது. இவர் 'எல்லாரையும் ஆதாயப்படுத்த எல்லாருக்கு எல்லாமும்" ஆயினர். இவரை ஒரு சமயத்தில் துரைத்தன அதிகாரிவீட்டிலும், மறுசமையம் பிச்சைக்காரர் வாசஸ்தானத்திலும் காணகலாம். இவர் தன் பணிவிடை செய்ததற்கான குறித்த நேரகாலத்தில் மாத்திரமல்ல, எப்பொழுதும் எங்கேயும் இரவுபகலென்ற விகற்பமின்றித் திரிவார். போகமுன்னும் போய்வந்தவுடனும் பிரார்த்திப்பது இவர் வழக்கம். இவர் தன் வாக்குக்குச் செவிகொடுக்கிறவர்களோடும் கொடாதவர்களோடும் முழங்காட்படியிட்டுப் பிரார்த்திப்பார். இவர் வார்சை எற்று இவரைக் கனம்பண்ணுபவர்களை விட்டுத், தன்னை வைவோர், திட்டுவோர், அவமரியாதையாக நடத்துவோரிடம் அடிக்கடிசென்று, பிரசங்கித்துச் செபிப்பார். இவர் பாவிகளுக்குச் சீவவாக்கைப் போதிக்க எசன்றத்தரை முதலியாரைமாத்திரமல்ல, மனந்திரும்பித் திரிவதுவை விசுவாசித்த மற்றெவரையுஞ் சேர்ப்பார். இவர் மனந்திரும்பப் பாவிகளை மனந்திருப்பும்படி, மனந்திரும்பியவர்களிடம் ஒப்புவிப்பார். அவர்களைப் பாவ வழியைவிட்ட மெய்ப்பத்தராய்க் காணுமட்டாய் ஓய்ந்திருக்கவேமாட்டார். இவர் இரட்சிப்புக்குப் பாத்திரனை பாவியுண்டென வெண்ணுது, கூடியபோதெல்லாம் சுவிசேஷ விருத்திக்கேற்ற எல்லாப்பிரயத்தனங்களையுஞ் செய்துவருவார். இவர் சுவிசேஷக் குருமாரில் ஒரு வயிராவி. இவர் "நம் பிக்கை, வீசுவாசம்," உள்ளவராய் மாத்திரமல்ல, எல்லாவற்றிலும் மேலாய்க்கிறிஸ்தமார்க்கம்மாத்திரங்காட்டும்அன்பால்நிறைந்தவராயுமிருந்தார். அவர் வயோதிபனுயில்லிடம் விட்டுப்போயும் மறபடியும் வேறுதேசங்களில் இருளில் வசிப்பவர்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறச் சென்றிருக்கிறார். இவரிலிருந்த ஆவி இரட்டிப்பாய் மற்றெல்லாச் சுவிசேஷக் குருமாரிலும் வரத் தேவன் கிருபை செய்வாராக.

இப்பொழுது மட்டக்களப்பு ஆறுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. 1 புளியங்தீவு. 2 அமிர்தகளி. 3 ஏறாவூர். 4 போரதீவு. 5 கல்முனை. 6 சாரன்கோட்டைதீவு. இவைகளில் இரண்டு இங்கிலீஷியகுருமார், மூன்று சதேச குருமார், உபதேசிகள்,தானத்துப்பிரசங்கிகள்,வரித்தத் தேவ ஊழியஞ்செய்துவருகிறார்கள். இங்குள்ள சபையார் தங்கள் குருமாரைத் தாபரிப்பதுமாத்திரமல்ல,இங்கிலீஷிய வித்தியாசாலைக்குக் கல்வியிற் றெர்ந்த பண்டிதரான ஒரு ஐரோப்பிய ஆசிரியனையுந் தங்கள் பொறுப்பில் அழைத்திருக்கிறார்கள். மேற்குறித்த இடங்களிலெல்லாம் இங்கிலீசு, தமிழ், பெண்களுக்கும் ஆண்களுக்கும் படிப்பிப்பதற்கான பள்ளிக்கூடங்களும் தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இங்குள்ள சபைகள்தொகை	6.	சபையார்	271.
இங்கிலீசுப் பள்ளிக்கூடம்	1.	மாணாக்கர்	135.
மற்றும்பள்ளிக்கூடங்கள்	15.	"	1118.
பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்கள்.	7.	"	242.

இங்கே வசித்த இங்கிலீஷிய குருமார். Rev. Messrs. Ault, R. Stott, J. Gillings, J. Walton, J. Kilner, W. H. Dean, W. Talbot, H. Hornby, E. Rigg, J. Brown, J. O. Rhodes, J. C. Pearson.

Digitized by Noolaham Foundation.
http://www.noolaham.org

சுதேசகுருமார். Rev Messrs. J. S. Philips, T. Cats, R. Watson, H. D. Silva, J. W. Philips, S. Niles.

கோழும்பு. கொழும்பு, கண்டி, காலி, முதலியவிடங்களிலெல்லாம் இவ் வெலிய குருமார் தேவபணிவிடையைச் செய்வதன்றி, அவ்வூர்களைச் சார்ந்த பற்பல கிராமங்களிலும் பதினெட்டுச் சுதேசகுருமாரும் வேறு உபதேசிகள் தானத்துப் பிரசங்கிகளில் அனேகரும் தேவபணிவிடைசெய்து வருகிறார்கள். இத்தமாகாணங்கள் பெரும்பாலுஞ் சிங்களராகவே, சுதேச குருமார் யாவருஞ் சிங்களவரும் பதங்கிக்காரருமாயிருக்கிறார்கள். இச்சிங்களராட்டினுள்ளுங் தமிழர்போய்க் குடியேறி இப்பொழுது எவிதில் பெருகின இலாவேவர்போல வருகிறார்கள் இராசதானியாகிய கொழும்பில் மாத்திரம் அறுபதினாயிரந் தமிழர் வசிக்கிறார்கள். இவர்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறவும் இவர்களையுங் கிறீஸ்துவன் மந்தையிற் சேர்க்கவும் கருதி, எங்கள் பிரெஸ்ட்ட குரு கில்னர் ஐயர் சுதேச குருக்களிலொருவராகிய, கனம். யோவானை வெஸ்லி பிலிப்ஸ் ஐயரை இவ்விடத்துக்கு 1871 ம் ஆண்டு அனுப்பிவைத்தார். அவர் அங்கே சென்று கொட்டாஞ்சேனைக்குங் கொச்சிக்கடைத்தெருவுக்குமிடையேயுள்ள சம்பட்டாவீதியில் வசிக்கிறார். அந்த விடத்தில் ஒரு பெண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தையும் வாணிபத்தெருவில் ஒரு ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தையும் ஸ்தாபித்தார். இவரும் இவருடைய உதவிக்காரரும் மாறிமாறி, கண்ணுதெரு, செக்கடித்தெரு, செட்டித்தெரு, வாணிபதெரு, சோனகதெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி முதற்றுவாரம் முதலியவிடங்களில் வசிக்குந் தமிழரைச் சந்திப்பார்கள். இந்தக் குரு தன்னேலையை ஒன்பது பகுதிகளாகப் பிரித்திருக்கிறதாய்க் காண்கிறேம். 1 ஆலயம்முதலாய்க் குறிக்கப்பட்டவிடங்களில் பிரசங்கித்தல். 2 பிறர்வீடுகளில் பிறரையுஞ் சேர்த்துவரச்செய்து பிரசங்கித்தல். 3 வீதிகள் சந்திகள் கடைகளிற் சென்று பிரசங்கித்தல். 4 செபக்கூட்டங்கள். 5 சுவிசேஷகூட்டம். 6 வீடுகென்றோறுஞ் சென்று சனங்களைச் சந்தித்துப் புத்திசொல்லல். 7 தரைமார் வீடுகளிலுள்ள வேலைகாரரைச் சந்தித்துப் புத்திசொல்லல். 8 காப்பிமேல்களுக்குப் போய் அங்கே வேலைசெய்பவர்களுக்குப் போதித்தல். 9 சுகோதர கூட்டங்களே நடத்தல் என்பவைகளே, இங்கே ஆரம்பத்தில் இருபத்தெட்டுப்பேர் சபையிற் சேர்ந்திருந்தார்கள். இப்பொழுது 34 பேர். இன்னும் ஐந்துபேர் சேர ஆயத்தமாகிறார்கள். இங்குள்ள பொலிசுத்தானத்தில் காலியிலும், கச்சேரிக்கண்டையிலுள்ள ஆலயத்தில் சாயங்காலமும், தமிழாராதனை ஒப்வுவாட்களேறாறும் வைக்கப்பட்டு வருகின்றன. இவர் நீர்கொழும்பிலும் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து அங்கும் இடைக்கிடைபோய்ப் போதித்து வருகிறார். கூடியகாலத்தில் சுதேச குருமார் கண்டி, காலி, குருநாக்கல் முதலிய மாகாணங்களுக்கும் அங்கங்குள்ளகிராமங்களுக்கும் அனுப்பப்படுவார்கள். "அறுப்போ மிகுதி வேலையாட்களோ சொற்பம். ஆகையால் அறுப்புக்கு எசமான் அனேகம் வேலையாட்களை அனுப்பிவைக்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுவோமாக."

மன்னார். மன்னரும் அதைச்சேர்ந்த மற்றும்வன்னிநாடுகளும் சவுக்கிய மற்ற தேசங்கள். இங்குள்ளார்ில்,சைவசமயிகள் மகம்மதியரும்மாத்திரமல்ல; ஆட்டின் வேஷந்தரித்த பாப்பியக்கோளுங்களின் மந்தைகளாகிய பாப்பியரும் வசிக்கிறார்கள். இவர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்க மெஸ்தர். எட்வேட். அடம்ஸ் என்னும் ஒருபோதகரும் உபாத்தியாயர்களும் அனுப்ப

ப்பட்டிருக்கிறார்கள். அங்கே பள்ளிக்கூடங்களைவைத்துச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகிறார்கள். மன்னரைச்சார்ந்த இடங்களிலும் பள்ளிக்கூடங்களைவைக்க எத்தனிக்கிறார்கள். யெரிகோவின் இதிலிலும் பலமாய்ப் பாரம்பரையியாயங்களாலும் பைத்தியமானதுபோதனைகளாலும் அறியாமையென்ற சுற்றுமதிலுக்குள் றைப்படுத்தி வைத்திருக்கும் பாப்பியருருமார், சந்தர்தோனியார், சந்தணமாதா, தொம்மையப்பரை வணக்கப் போதித்துப் பழக்கிவைத்திருக்குந் தங்கள் மந்தைகளுக்குச் சபையின் மேய்ப்பராகிய யேசுக்கிறிஸ்துவின் வாக்குக் கேட்குமோ, தாங்கள் கட்டிய அஞ்ஞான மதில்விழுமோவெனப் பயப்படுவார்கள். விசுவாசத்தோடு கூறுங்கள். அஞ்ஞானமதிலும் பாப்பிய அரணும் இடியும். "கர்முடைய தேவன் பட்சிக்கும் அக்கினியாயிருக்கிறாரே."



HINDUISM.

இந்துசமையம்,

உம் பகுதி.

ஓய் இந்துக்களே,

யாதாயினும் ஓர்விஷயத்தை அத்தாட்சிப்படுத்துவதற்கு அனுபவம், லிகிதம், சாட்சி வேண்டுமென்கிறீர்கள். அப்படியே நாம் உங்கள் தேவர்கள் மெய்த்தேவரல்லரென்பதை ரூபித்தற்பொருட்டு,அவர் குணகிருத்தியங்களைக் காட்டுகிற புராணஇதிகளிற் சொல்லியவற்றையும் அதற்குச் சார்பான நூல்களின் உடம்பாடுகளையும், தெளிவித்தோம். நீர் இவையாவும் திருவிளையாட்டுகளென்ற சொல்லி உம்மை ஒருவாறு தேற்றிவைத்தீர். இப்பொழுது உங்களுக்குள்ளே சில கல்விமான்களெழும்பி ஆகம சாஸ்திரப் பேரறிவுடையாத அவிவேகிகள் நமது நூல்களைச் செம்பொருளாய் விளங்கிப் பிழைபடுகிறார்கள். அவற்றிற்குக் குறிப்புப்பொருள் வேறுண்டென்ற அனுமனம் இங்ஙனம் தமது கல்விச் சாமர்த்தியத்துக்கேற்ற வாசாலங்களைக் காட்டும்பொழுது நீரும் களிப்படைகிறீர். இதென்ன அச்சரியம்! குறிப்புப் பொருளுண்டென்று அவர் சொல்லும்பொழுது. செம்பொருளாய் விளங்கிக் கிடந்தவற்றின் இழிவான கருத்துப்பொருளே மறைத்தற்பொருட்டே இப்படி ஓர் சாமர்த்திய கற்பிதம் பண்ணுகிறார்களென்று அறிவீர்களாக. சமயதஷணைகள் ஒலிவடிவாகவேனும், வரிவடிவாகவேனும், சிலவடிவாகவேனும், எப்படியிருந்தாலும் அவைகள் பூஷணைக்குரியவைகளென்ற நீங்கள் கூறுகுலிக்க, உமது ஆசிரியர்கள் அவற்றைக் குறிப்புப்பொருளென்னும் பரிவேடத்தால் மூடப்பார்க்கிறார்கள். உங்கள் புராணஇதிகளுக்கு ஓர் குறிப்புப்பொருளுண்டென்று சாதிக்க முயல்வது, முடியாதொன்றை முடிக்க முயன்றுற்போலிருக்குமேயன்றி வேறன்று. உங்கள் நூல்களைப் பற்பல காலத்திலும் பாடியதும் பல அறிஞர்கள், ஒருகாலத்தில் ஒரு இடத்தில் கூடியிருந்து நீங்கள் குறிப்புப்பொருளாயறிந்துகொள்ளும்படி ஆராய்ந்து பாடிவைத்தாற்போல, நூல்செய்திருக்கிற தன்மையை என்னசொல்லுவோம்!


Digitized by Noolaham Foundation.

இன்னுஞ் சொல்லுவோம் கேளுங்கள் உங்கள் நூல்கள் தேவர்களென்ற

அறையிடும் பேர்கள் வருணனையால் அலங்கரிக்கப்பட்ட பூர்வ வீரவாங்கலாய் அல்லது யாதொரு காரணம்பற்றி விசேடங்கொண்ட மனுடராயிருக்கலாகும். அல்லது உங்கள் நூல்கள் கட்டுக்கதையாகவுமிருக்கலாம். அல்லது சமைய குபைகளின் நைதஞ்சுன்யாவும் ஒன்முகச் சேர்க்கப்பட்ட நிரட்டுகளாகவு மிருக்கலாம். ஆ, பத்தினியைச் சுவாலிக்கப் பண்ணுவதும், பரமசைதன்னியருடைய குணவிலக்கணங்களைத் தெளிவிப்பதும், கற்போன்ற சித்தையையும் மெலுகுபோலாக்கத் தரும் நிருப்பாடல்களுள்ளதுமான கமத சமைய நூலே அப்படிச் சொல்லப் போமா வென்பீரேல், கேளும்:

புத்தி சித்தம் முதலிய அந்தக்கரணங்களையுடைய மனுஷன் இயல்பிலே தேவ வழிபாட்டுக்கு ஏற்ற ஓர் சிருட்டியாக உண்டுபண்ணப்பட்டிருக்கிறான். இவன் எச்சமயத்தவனுகயிருக்கினும் சரசரனுகியாலும் பாவாலும் தேவனே வணங்கும் பான்மையுடையனுயிருக்கிறனென்பது மெய்யே. இது எவ்வளவு நிஷ்டாந்த பூரணம்பெற்றதாயிருக்கிறதோ, அவ்வளவு மனுஷன் தேவனேபேற்றவும், போற்றவும், பாடவும், ஆடவும், ஆனந்திக்கவும், அழவும், விழவும், சார்புள்ளவனுயிருக்கிறனென்பது நிச்சயப்பட்டிருக்கின்றது. மகமதிய மயிராக்கியனும், புத்தசமய யோகியும், நிறிஸ்தசமய பத்திமானும், சைவசமய அபிமானியும், தத்தம் சமயதேவராகிய வழிபடும் தேவரை வணங்குங்காலத்தும் இடத்தும் கண்ணீர்சொரியத் தியானிப்பதை யாங்ஙனுங் கண்டறிலியா? சமய ஆராய்ச்சிசெய்து சற்சமயத்தைத் தழுவ விரும்பிய சாதகர்கள் கண்டடையவேண்டிய சாட்சியிதுவன்று. உங்கள் நூல்களில் விரித்துவிடக்கிற, வெபெருமான் முதலிய தேவர்களுடைய தராசாரங்களும், அதிஷ்டானமாய் எற்படுத்திய விக்கிரகங்களும். அவற்றின் வரலாறுகளும், உங்கள் ஆலயங்களிலே சத்திய தேவனுக்கு எள்ளளவும் ஏராதாய்க் கொண்டாடும் வழிபாடு வந்தனைகளும், இவைபோலும் பிறவுமே, உங்கள் சமயம் சத்திய சமயமல்லவென்பதற்குப் போதிய நிஷ்டாந்தங்களாயிருக்கின்றன.

தேவகிருபையைக்கொண்டு வருஞ் சங்கியைகளில் உங்கள் புராணங்களில் கூறப்பட்டிருக்கிற தொண்டர்களுடைய சில சரித்திரங்களே எடுத்துக் காட்டுவது மிக உபயோகமென்று நினைக்கிறேம். எழுதப்பட்டவைகளைப் பாரபட்சமின்றிச் சீர்தூக்கிப் பாப்பீர்களாக.



LOOKING AT THE BRIGHT SIDE.

கல்லபக்கத்தை நோக்கல்.

JANE and MARY.

ஜேனும் மேரியும்.


ஜேனும் மேரியுமென்று இரண்டு சினேகிதிகள் இருந்தார்கள். அவர்கள் இருவருந்தங்கள் பிறப்பிலும், செல்வத்திலும், கல்வித்திறமையிலும், செய்பாகத்திலுஞ் சரியொத்தவர்களாயிருந்தார்கள். ஆகியில் அவர்கள் குணஞ் சரியொத்திருந்தாலும் விதற்பமான நடையிலுல் மாறுனகுணமுள்ளவர்களானுர்கள். ஒவ்வொருசாரியத்தின் நட்டமான பகுதியை நோக்குவதே

ஜேனுடையமழக்கம். ஆயிரக்கணக்கானஅழகையுடைய புதியபிரபந்தத்தில் இரண்டொருசுற்றமிருந்தால் அவையைக் கவனிப்பதேயொழிய மற்றும் இன்பத்தைக்கொடுக்கும் வசனங்களைக் கவனியாதுவிடுதே அவளுடைய வழக்கம். அவளுக்கு உன்னதமான ஓர் படத்தைக் காட்டுங்கால் அதல் விசேஷமற்ற அல்லது குறைவேலையாயிருக்கிற லெ பருநியைமாத்திரமே கவனிப்பான். அவளுடைய தோட்டம் மிக அழகும் திப்புரவும் ஒழுங்குள்ளதாக இருந்தாலும்,அவளுடன் அதற்குள் ஆராகுதல் செல்லும்போது,அதின் நிறமையைப்பற்றியல்ல, பாடுதேங்களைப்பற்றியும், நத்தை மயிர்க்குட்டிமுதலானவையைப்பற்றியும், வனக்கமாக உதிரும் இலைகளை நீக்குவது தொல்லையென்பதைப்பற்றியும் பேசுவாள். நீ இன்பமனுபவிக்கும்படி அங்குள்ள சோலைகளிலொன்றிலிருப்பாயாயில் அவள் ஒருபோது மரம் மிகநெருங்கியதென்றுகுதல், அல்லது தண்ணீர் குறைவென்றுகுதல், அல்லது உஷ்ணமாயிருக்குதென்றுகுதல், அல்லது குளிராயிருக்குதென்றுகுதல், இப்படிப்பட்ட பல இலம்பலையுஞல் உன் சுவக்கியத்தை நிற்பத்தினைக்கூடாதவள். நீ அவளுடன் சந்தோஷமாய்ச் சம்பாஷிக்கலாமென்றெண்ணிப்போகும்பொழுது, அவள் தனது அசௌக்கியத்தையாகுதல் அல்லது தன் பிள்ளைகளுக்கு நேரிட்ட இடைஞ்சல்களையாகுதல் சொல்லி, உன்மனதை துவிதமும் விசனப்படுத்துவாள். இவ்விதமாய்த்தான் துக்கப்படுவதை மன்றித் தன்னைச்சுற்றியிருப்பவர்களுக்கும் லிசனத்தை வருவிப்பாள் இவளுடைய நெகேதர் என் சந்தோஷமுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்பதற்குக் காரணம் இன்னதென்பதை அறியான்.

மேரி இவையெல்லாவற்றிற்கும் மாறுன தனமுள்ளவளாயிருந்தாள். அவன் காரியங்களின் நயந்த பக்கத்தைக் கவனிப்பதற் பழகினபடியால் தனது மகிட்சியைக் காத்துக்கொள்வதுமன்றித்,தான் அப்படிப்பட்டவனென்பதை மற்றும் தன்னைச்சூழ்ந்தவர்களுக்கும் மனப்பாக்கியமாய் வெளிப்படுத்துவாள். அவளுக்கு யாதொரு அநிஷ்டவினங்கள் சம்பவிக்கும்போது, இதிலும் மிகக்கேடானவை சம்பவிக்கவில்லையென்று மகிழ்ந்து அதினிமித்தியம் தேவனுக்குத் துதிசெலுத்திவருவாள். அவன் தன்னை அறிவதற்குத் தனிமை வசதியாயிருப்பதாலும், தான் அனுபவிக்குஞ்சந்தோஷத்தை மனப்பாக்கியத்துடன் வெளிப்படுத்துவதற்குச் சங்கம் வசதியாயிருப்பதாலும், இவைகளிற் களிப்புக்கொள்ளுவாள். அவன் மற்றவர்களுடைய சன்மாக்கக்குறைவைக் கண்டித்தும் தனக்கு அறிமுகமானவர்களின கேடான பழக்கங்களைத் திருத்தியும்வருவாள். அவள் மனதைத் திருத்திப்பதத்தவேண்டுமென்றும் கற்றுக்கொள்ளவேண்டுமென்றும் புத்தகங்களை வாசிப்பதால், அவள் அவைகளில் குற்றம்பாலிப்பது அருமை அவளுடன் நீ சென்றால், அவள் குன்றுகளில் அல்லது பள்ளத்தாக்குகளில் அல்லது செடிகளில அல்லது வெடிப்புகளில் அல்லது புஷ்பங்களில் மூன் ஒருபோதும் காணப்படாத அலங்காரங்களைக் காட்டுவாள். சவுக்கியம் அல்லது வசதி இடவேற்றுமையினுல் அல்லது காலபேதத்தினுல் வருகின்றமையால், அவள் அவைகளில் மிகச்சந்தோஷங்கொள்ளுகிறாள். அவள் சம்பாஷிக்கும்வேளைகளில் துக்கத்தைவருவிக்சத்தக்கவையாயவது மற்றவர்களுடைய குற்றக்குறைவுகளையாகுது ஒரு பொழுதும் எடுத்துப்பேசுவதில்லை. அப்படி ஆராகுதல் சொல்லிக்கேட்டால் அதைத் தனக்கொரு படிப்பினையாக எடுத்துக்கொள்வாள். நேன் பொட்டுப்புச்சியைப்போல் குறுமியு புலுங்கவிலிருந்தாலும் நஞ்சையுறி ஞ்ச, மேரியோ தெனியைப்போல ஒவ்வொருபுண்டிலிருந்தும் தேனைச்சேர்ப்

TVUMani.org Panpaham.org

பார். ஒருமுறை ஒருதன்மைத்தாயிருந்த இருகுணங்களில் ஒன்று புண்படதும் மனம்மியமுற்றதும் உலகமெங்கும் இருளானதுமாக மாற, மற்றது இன்பத்தையும் மகிழ்ச்சியையுஞ் சுரியப்பிரகாசத்தையுங் கொடுக்கின்றதாக மாறினது.



SIN.

பாவம்.

நியாயப்பிரமாணமில்லாதிருந்தால் மீறுதலில்லை. மீறுதலில்லாவிடின் பாவமுமில்லை. பின்னைப் பாவமாவதென்ன? நியாயப்பிரமாணத்தை மீறுதலே பாவம். நியாயப்பிரமாணமாவதென்ன? யெகோவா மின்னல், இடி முழக்கம் என்பவற்றின் மத்தியில் மோசேயின் மூலமாக சினாய்மலை உச்சியில் தமது விரல்களால் எழுதி சுத்தருளிய பத்துக் கற்பனைகளுமே நியாயப்பிரமாணமாம்.

கே. ஆதியிலே சிருட்டிக்கப்பட்ட ஆதாம் ஏவாள் என்பவர்களின் உள்ளங்களிலும் அப்பிரமாணங்கள் ஊன்றி வரையப்பட்டன என்பதற்கு அத்தாட்சியுண்டா?

மறு. தேவனுடைய யெகோவா மனிதன் நன்மை நிமைகளை உணரப்பெற்றுள்ளபின் ஏருவரைப்போலாளனை பாருங்கள் என்றார். ஆதி. 3: 22. என்று திருவுளம் பற்றினார். இவ்வசையே நன்மை நிமைகளை உணரப்பெறும் அறிவு ஆதாமின் உள்ளத்தில் மாத்திரமல்லப், பூமியின்கண்ணே உற்பவிக்கும் ஒவ்வொரு புருடன், ஸ்திரி, பின்னை என்பவர்களின் உள்ளங்களிலும், உச்சரகளிலும் ஊன்றிப் பதிக்கப்பட்டிருக்கின்றது என்பது சத்தியம். பத்துக்கற்பனைகளாயை நியாயப்பிரமாணம் எழுத்துமூலமாகக் கிடைக்கப் பெறுதவர்கள் தானும் பொதுப்பட நன்மையை விரும்பித் நிமையை வெறுத்து வருவதினுல், நன்மைநிமைகளை உணரப்பெறும் அறிவு எல்லாருடைய உள்ளங்களிலும் பதிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு நல்ல பேருள அத்தாட்சியேயாம்.

கே. நன்மை நிமைகளை உணரும் அறிவில், பத்துக்கற்பனைகளும் அடங்கியிருக்கிறதென்பது எப்படித் தெரியும்?

மறு. ஆதாம் ஏவாள் என்பவர்கள் கனிபறித்துப் புசித்ததினிமித்தம் அவர்களுக்குக் கிடைத்த தண்டனையினுல், மூதலாம் கற்பனையை அறிந்திருந்தார்களெனத் தெரியவருகிறது. காயின் சொன்ன சொற்களையும் செய்தசெய்கைகளையும் பார்க்குமிடத்து ஆறாம் கற்பனை அவனுக்குத் தெரிந்திருந்தது என விளங்குகின்றது. தேவ புத்திரரும் நரபுத்திரரும் கலந்து விவாகசம்பந்தம்பண்ணிப் பாவஞ்செய்தபோது சலப்பிரளயத்தினுல் அழிக்கப்பட்டார்களே. அவர்களும் யெகோவாவாகிய தேவனைக் கைவிட்டதினுல் பாவத்தினுல் வரவேண்டிய தண்டனைக்கு எதவாளுர்களெனத் தெரிய வருகின்றது ஆதி. 12: 18, 19 ம் வசனங்களில் வாசிக்கிறபடி, பார்வோன் அபிராமைக் கடிந்துபேசினதையும், ஆதி. 26: 10, 11ம் வசனங்களில் வாசிக்கிறபடி, பெலிஸ்தியருக்கு ஈசாக்கு அபிமேலேக் ஈசாக்கைக்குறித்துச் சொன்ன கவனிப்புக்களையும் பார்க்குமிடத்து அக்காலத்துள்

வர்களுக்கும், எம், கம் கற்பனைகள் தெரிக்கிருந்தன என்றும் விளங்குகிறது.

ஆதி. 39 : 9 ம் வாக்கியத்தில் வரைக்கிறபடி போத்திப்பாருடைய மனைவியாகிய யோசேப்புச்சொன்ன கவனிப்பைக் கவனிக்கும்பொழுது அவனுக்கு ஏழாங்கற்பனை தெரிந்திருந்ததென்றும், யோசேப்பும் அவனுடைய சகோதரரும் பண்ணிய அந்நியோன்னிய சம்பாஷணையிலும், ஆதி. 37: 38. அவர்களுக்கு 7 ம், 8 ம், 9 ம், 10 ம் கற்பனைகள் தெரிந்திருந்தன என்றும் தெரியவருகிறது.

கே. காலாய் கற்பனையைக் கைக்கொள்வதற்கும் பூர்வீக அத்தாட்சி உண்டா?

மறு. சிருட்டிப்பின் கிரியை மூலமாக யெகோவாவாகிய தேவன் காலத்தைத் தினங்களாகப் பிரிவுசெய்கையில் வேலைசெய்யும்படியாக ஆறுதினங்களையும் மனுஷனுக்குக் கொடுத்து, ஏழாம்காளையோ தமக்கென்று பிரித்து வைத்தார். ஏழாங்காளில்லே வேலைசெய்ய மனுஷனுக்கு உத்தரவேயில்லை. காலத்தில் ஓர்பாகமாகிய அத்தினத்தைத்தான், தமக்குரிய பாகமெனப் பிரித்து வைத்தார். அத்தினத்தைத் தமக்கு ஆசீனமாக்கி அதை ஆசீர்வதித்து பரிசுத்தப்படுத்தினார். ஆதி. 2: 3. ஆசீர்வதித்துப் பரிசுத்தப்படுத்தினார் என்னும் இவ்விரண்டு சொற்களும் வேதாகமத்திற் பற்பல இடங்களிலும் சொல்லப்பட்டிருந்தும், அவைகளின்பொருள் ஒன்றுகவேயிருக்கிறதுமன்றிப், பரிசுத்தப்படுத்தப்பட்ட யாவும் தேவனுக்காகினமான பொருள் எனவும் விளங்குகின்றது. ஆகலால் தேவனுக்காகினமான எதும் பின்னொருகாலும் மாறக்கூடாதது. அத்தினம் என்றென்றைக்கும் தேவனுக்கே உரியது ஆகலால் யேசுகிறிஸ்து, மனிதகுமாரன் ஓய்வுகாளுக்கும் கர்த்தராகவே இருக்கிறாரென்று சொன்னார்.

யெகோவாவாகிய தேவனே யாவரும் ஓய்வுகாளைக் கைக்கொள்ள வேண்டுமென்னும் கற்பனையையும் மற்றும் கற்பனைகளையும் வாக்குமூலமாயும் எழுத்துமூலமாயும் கொடுத்தார். மோசேக்கு அக்கற்பனைகளைக் கொடுக்கும் வரை நிருத்தேயில்லை; தேவனே அக்கற்பனைகளை எழுதி அவைகளைச் சாட்சிப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளும்படி கற்பித்தார்.

உலகத்தின் கண்ணேயுள்ள எக்காலத்தவரும் ஓய்வுநாளைக்கைக்கொள்ள வேண்டுமென்று இதுவே வற்புறுத்திச் சொல்லுகின்றது. யேசுவே அதின் பரிபாலனர். சீனாய்மலையில் தேவன் எழுத்தருளி வாக்குமூலமாய்ப் பத்துக்கற்பனைகளையுங் கூறியபோதே, யாத். 18: 20. ஓய்வுநாளைக் கைக்கொள்ளவேண்டுமென்னும் நாலாங்கற்பனை, மனிதன் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளுக்கும், மனுஷன் தன்னுடனெஞ்சக மனுஷனுக்குச் செய்யவேண்டிய கடமைகளுக்கும் இடையிலே சொல்லப்பட்டிருக்கிறதமன்றி, அக்கற்பனையே மற்றெல்லாக் கற்பனைகளையும் இணக்கின்றது.

சலப்பிரளயகாலத்துக்கு முன்னிருந்த சனங்களையும், உரோமர் 2: 14, 15 ல் காண்கிறபடி இத்தப்பிரமாணமே ஆண்டுகொண்டது. இத்தப்பிரமாணமே அவர்கள் உள்ளங்களிலும் தலைகளிலும் வரையப்பட்டது. உண்மையென்று அவர்கள் உணர்ந்து அறிவுக்கு மாறுகச் செய்தபாவம்பாவமாகவேயிருந்தது. இந்த நல்லறிவு எல்லாருடைய உள்ளங்களிலும்பதிக்கப்பட்டதால் இத்தப்பிரமாணம் ஒவ்வொருவன் வசத்திலும் இருக்கின்றது.

ஒருவருப்பார் நன்மைசெய்யத் தெண்டிக்கிறார்கள். குறைவு காணுங்கார் மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள். பின்னோர் வருப்பார் மனசார எண்ணித் தீமைசெய்கிறதுமன்றித். தங்கள் இருதயங் கடினமாக்கப்படும்வரைக்கும் அத்தீமையில் நிலைநிற்கிறார்கள். அவர்கள் பொய்யானவைனை நம்பும்படி தேவன் இனக்காரந் கொடுக்கிறார். பாவத்தில் இனக்காரங்கொண்டு நடப்பதினால் அவர்கள் இருதயங் கடினங்கொண்டு குருட்டாட்டமாகிறது.

உலகாரம்பம் முதல் சற்காலம்வரைக்கும் நடத்துவரும் தேவச் செயல்களைப் பார்க்கையில்,ஒய்வுநாளைக் கைக்கொண்டு வருகிறவர்கள் தேவனைப்பிரியப்படுத்தி வருவதனால் அவர்களுக்கு மேலான ஆசீர்வாதங்களும் பாக்கியங்களும் அருளப்படுகின்றன என்பதையும்; ஒய்வுநாளை அநாசாரப்படுத்துகிறவர்களோ தேவனைப் பிரியவீனப்படுத்துவதினால், குற்றவாளிகளாகித் தண்டனைத்தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறார்கள் என்பதையும் உள்ளங்கை நெல்லியம்பழம்போல வினங்கலாமே.

இனேதெரே, நன்மையாது தீமையாது என்று நீங்கள் அறிந்திருக்கக்கொள்ள, பொய்யைக் தீமையென்றும் மெய்பேசுவது நன்மையென்றும் உணர்ந்திருக்கக்கொள்ள, மெய்யைவிட்டுப் பொய்யை ஏன் பேசுகிறீர்கள்? களவாண்டுகொண்டு பிறரை வஞ்சிப்பது தகாதென்றும், உதாரசீலராயிருக்கத பிறருடைய பொருள்பண்டங்களில் ஆசைகொள்ளாமலிருப்பது தகுமென்றும் அறிந்திருக்கக்கொள்ள, ஏன் களவாண்டு பிறரை வஞ்சிக்கிறீர்கன் ? கோபங்கொள்வதும் கொலைத்தொழில்புரிதலும் நிமையென்றறிந்திருக்க, ஏன் பொறுமைகொண்டு கொலைத்தொழிலைச்செய்கிறீர்கள் ? அமார்க்கம் தாஷ்ணம் முதலானவைகள் தன்மார்க்கமென்றறிந்தும், ஏன் அவைகளைத் தரப்படுத்தாது அவைகளோடு உறவாடி வருகிறீர்கள் ? அவியாய் அதரிசனராயிருக்கிற பரபரனுடைய ஒருவரிருக்கக்கொள்ளுகல், செம்பு,பொன், பித்தளை முதலியனவற்றைக்கொண்டு விக்கிரகங்களைச்செய்து ஏன் நமஸ்கரித்தலருகிறீர்கள் ? விலக்கிவைக்கவேண்டியவைகளை ஏன் விருப்பத்தோடும் பேராசையோடும் செய்கிறீர்கள் ? காடித்தோஷத் செய்யவேண்டிய நன்மைனை, ஏன் வெறப்போடி உற்பித் தள்ளுகிறீர்கள் ? ஆ! பரிதாபம்; யெகோவாவாகிய தேவன் அருளிய கற்பனைகளை உங்களுக்குத் தீர்வைகொடுக்குமென்றும், இரட்சகரின்றி நீங்கள் கெட்டழிந்து நித்திய நரகதண்டனைக்கு ஆளாவீர்களெனறும் உணர்ந்து கொள்வீர்களாக.

L. S.

ENGLISH EDUCATION AND HINDOO LITERATURE.

இங்கிலீஸ் வித்தியையும் இந்தியநூற்களும்.

உயர்ந்த இங்கிலீஸ் வித்தியைச் சகசமான நிரைடைந்த கலேக்கியானத்தை இந்தியர்களுக்கு கொடுக்குமென்பதை நாம் தெளிந்துகொள்ளலாம். தலேமுறை தலேமுறைகளாய் உயர்ந்தநூலாசிரியாறற் பூரணமடைந்த வேறோர்பாஷையில் வினங்கிய அருணமையான ஞானத்துக்குக் கற்றுக்கொள்ளுஞ்மாத்திரமே, சென்மபாதைக்கலவி என்றிற் சேரலும் என்பது ஓர்பிரமசத்தி

யம். இங்கிலிஷ்பாஷையின் விசேஷித்த உரை ஆக்கியோர் தம் அருட்கியைத் தமது முன்னோரின் புல்லத்தனமான புத்தகங்களைக் கற்றறிந்தற் பெற்றதில்லை. (Hooper) கூப்பர் (Bacon) பேக்கன் என்னும் நூலாசிரியர் (Beowulf) வீவுல் என்பவனின் கதைகளையும் (Ina) ஐனு என்பவனின் கட்டளைகளையும் (Alfred) எல்பிரத் இராசாவின் பாஷாந்தரங்களையும் (Elfric) எல்பிரிக் உடைய சல்லாபங்களையும் (Wolfstan) ஊல்வ்ற்ன் உண்டாக்கிய பிரசங்கங்களையும் கற்றுக்கொள்வதில் தங்கள் காலத்தைப் போக்கவில்லையே. இல்லையே இல்லை. பூர்வீக கிரேக்கர் உரோமரின் பாண்டித்திய பரிசிட்ட ஸ்தானத்தில் அவ்வாசிரியருடைய ஆத்துமாக்களில் ஒளி பற்றினது. அத்தேதனின் அத்தசாம உற்சவத்தில் நிவ்வியாகினியென்றும் எரிந்துகொண்டிருந்த வேதிகையை முதற் சமீபித்தவன் கொழுத்திய தீவர்த்தியில் அடித்தவன் கொழுத்த, அதில் அவனுக்கடுத்தவன் கொழுத்த, அப்பாலிருக்கிறவனும் அப்படியே செய்யத், தேசம்முழுவதும் தீவர்த்தி அணைக்கக் கூடாதபடி கட்டினபான்மையாய் விளங்கியது அதுபோலவே, பிரபையான பேறுகளைச் சந்ததியினின்று சந்ததிக்குச் செல்லும்படி கொடுத்திருக்கிறார்கள். இந்தியாவிலும் இவ்வண்ணம் ஆகவேண்டும். மகாபாரதக்கதைகளையும், இராமாயணக்கற்பிதங்களையும் ஆராய்வதினலுமல்ல; குறவிய, கூரிய குறளின்பழமொழிகளைக் கற்பதினலும், வையற்றகல்ல காலடியாரின் முதுமொழிகளை நாடுவதினலும் அல்ல; புராணங்களின் பொய்களையும் தேதங்களின் போதங்களையும்பற்றுவதினலுமல்ல; இவைகளினல் சமர்த்தன்ன மகத்தான கலைஞானம் தோன்றுது. அப்போலே அவித்தபோன அக்கினியில் கரித்த கறுத்த கரிகளாயிய இவைகளியத்தைக்குவா. மொழிபெயர்ப்புகள் உச்சிதமாயினும் மனுஷருடைய கெஞ்சத்தைப் பற்றுவதில்லை. மகிமையான ஒரேயொரு நூல்தவிர மற்றெவற்றின் மொழிபெயர்ப்பும் அதிக பயன்படவில்லை. தவிர்தலாகிய அந்நூலும் தேவபுத்தகமாயிருக்கின்றமையினல் மற்றவைகளைக்குறித்து நாம் சொன்னதற்குச் சான்றுருமேயன்றி வேறல்ல. மேற்றிசையாரின் அறிவாகிய ஆற்றை இந்தியாவின் வெப்பவெளிகளில் பாயத்திருப்பிவிடுவது,அந்த ஆற்றோரங்களில் பரதேசக் கோதுமைப்பயிர் அசைவாடிக்கொண்டு கிற்கவும், இராச கருவாலியின் கொம்புகள் ஓங்கி அதின் கலத்தை முத்தமிடவுமல்ல; இந்தியாவின் பயிர்வகைகளெல்லாம் செழித்தோங்கவும், இத்தேசத்தின் பணை தெங்கு, கமுகு முதலிய கூந்தல் விருட்சங்கள்யாவும் தங்கள் மகத்துவ தோகைகளை உயர்த்துவதற்காகவுமே என்றுணர்க. அதாவது ஐரோப்பிய கருத்துக்கள் இந்தியருக்கு இயல்பும் இணக்கமுமாகவேண்டும். மேற்றிசையாரின் கருத்துமுறைகளையன்றி அவர்களுடைய பாஷை நடைஎங்களுக்குவேண்டியதல்ல. நாற்றுக்களே எங்களுக்குத் தந்துவிட்டால்,நம்மூரின் வெப்பமான வெய்யிலும் மணற்றரையும் நம்பிக்கையாய் வற்ற வர்க்கங்களைப் பிறப்பிக்கும். இந்தியரின் சென்மபாஷைகளின் தருணியையும் பலத்தையும் அவைகளின் வேகத்தையும் செழிப்சியையுங் குறித்து, இச்சகம் அற்பமேனுமின்றி மிக மேன்மையாய் உரைக்கலாகுமே. அவைகளை வியட்டிக்குங்கால்,சந்தேகமற்ற நியதிப்பிரகாரம் உயர்ந்த கருத்துக்களைத் தெரிவித்தற்கும்,அதி சதிய சாஸ்திரங்களையும் பரிசுத்த தைவீகத்தையும் அறிவித்தற்கும், அதிகரிக்கும்அதிசய திராணியுடையன. அவைகளின் காளங்களில் புதுச்தேவ தாடிக்கவும் அவைகளின் கெஞ்சில் புதுத்தாது குடிக்கவும் புதுஉற்சாகமாத்திரமேவேண்டும். பராக்கினிபற்றவே

Digitized by Noolaham Foundation.

அவைகள் கிரேநெரியும் சுடர்களாய் அனல்கொடுக்கும் சுவர்லேகளாய்த் தேசம் முழுவதிலும் மூண்டு சொலிக்கும்.

ஒருசாதியின் கலேஞாநத்தின் விலேமதிப்பே மிஷன் ஊழியத்திற்குரிய அவைகளின் விலேமதிப்பென யாவரும் இணங்கவேண்டும். சுதேசோற் பத்தியான நிறைந்த கலேஞாநத்தோப் பெருக்குவதற்குத் தான்ஞலியன்றவ ஞியற்றுதல் கடமையென ஒத்துக்கொள்ளாது மறுக்கும் மிஷனரி உண்டெ ன்றெண்ணுதல் கூடாது.

ஆனல் எப்படி இயற்றலாம்? நூற்றுக்கொருமிஷனரிதானும் தரவழியான துப்பாஷியாக வருதல் கூடாது. ஆயிரத்திலொருவர்தானும் சரியான தரு ந்த முதற்தர அக்கியோனுகுதல் சந்தேகம் நூற்றுக்கொருவராயினும் ஆங்கி யோனுகும் இயல்பற்றிருக்க, எனைய 99 பேரும் சராசரி ஐந்துவருஷம் இத்தேச வாசிகளாயிருக்கின், அவ்வைந்துவருஷத்திலும் ஒவ்வொருவர் 100 மாணுக்கருக்குக் கல்விபயிற்றுவிக்கிறபடி நூற்றுக்கிருபது மாணுக்கர் ஆங் கியோராதற்கேற்ற விவேகமுடையராய்வரின், மூன்சொன்ன நூற்றுக் கொருவரான மிஷனரி 20 வருஷங்களளவுக்கு மலேவு மலேச்சிகரமேறி இனேத்து ஒரு புத்தகமுண்டாகவி உலகத்தவர்க்கு ஓருஞ்புரிதற்குமுன், எனை ய 99 பேரும் கிட்டத்தட்ட 2000 சுதேசிகள்சேர்ந்த சேனையை அனுப்பு வார்கள். தேசத்தின் வஞ்சகமான ஒளிப்பிடங்களேயும் அபத்தமான ஒழுக் கவழிகளேயும் செங்குத்தான கன்மலேகளேயும் அந்தரங்கமான நிழறைகளே யும் அறிந்து தெளிந்த வீரசேனே! ரமது ஜரோப்பிய தாலீது ஆட்டுக்காரப் பையனுடைய கவணிற் கல்லேச்சுறற்றி வீசும்பொழுது, சயம்பீரமாய் ஆர்ப் பரித்துப் பெலிஸ்தியரைப் பாஞ்சாலஞ்தொடங்கிக் காலிலைக்குரும் தூரத் தும் ஓர்சேனே! ஆ, இந்த மகத்தான் திருத்தியத்தைச் சபைமுமன்றுசெய்ய தமகா முக்கியமல்லவா? நாம் முயன்றாலும் முயலாதிருந்தாலும், பிற்கால கலேக்கியானம்பெருகும்படி இங்கிலீஷ்வித்தியை இந்தியாவில் வீட்டுக்கும் கு றுக்கும் ஆழமான அகலமான நீர்க்கால்களே வெட்டுகின்றது. சீக்கிரத்தில் அ க்கால்களில் அழுக்கான அசுசியான அபத்தமான நீர்நிறைந்து பாய்ந்து சா வையும் சங்காரத்தையும் எங்குங் கொண்டு செல்லும். ஆ! [illegible] எழுந்து "சருவத்துக்கு மேலான்வரின் வாசஸ்தலங்கள் [illegible] த்த ஸ்தானமாகிய தேவனுடைய நகரத்தைச் சந்தோஷப்படுத்தும் [illegible] நீரோட்டங்களால்" அவைகள் நிறைந்தோட்டச் செய்வோமா.

J. O. R.

SKETCH OF A SERMON.

பிரசங்கக்குறிப்பு

இயேசுகன் என்னுடைய சனங்கள் பொய்சொல்லாத சந்[illegible] 63 : 8. 2கொலோ. 3 : 9. எபே. 4 : 25 ம் பார்க்க.)

மனுஷருக்குள் பொய் மிகுதி. விசேஷமாய் விக்கிரகார[illegible] னில் மேற்த அதிகம். மனுஷர் தாங்கள் வழிபடுகிற தேவ[illegible] து இயல்பு. (யோவா. 3 : 19. 20 ஐயும் காண்க.)

விசேஷிக்கிற ஒரு குறிப்பு. ஆயினும் பொய்சொல்ல அதிக சோதனையிருப் பதினால் அவர்கள் விழிப்புள்ள மனமுமாயிருக்கவேண்டும்.

(1.) வாக்குகளே நிறைவேற்றக் கவனமாயிருக்கவேண்டும்.

உதாரணம். வாங்கினகாசை ஆபரணங்களே வேறேதும் பொருளே இ ன்ன நாளில் தவறாமல் கொண்டுவருகிறேனென்கிறீர். தவறினால் பொய் யல்லவோ? நிறைவேற்றுகிறதைப்பற்றிக் கொஞ்சமேனும் சந்தேகப்பட் டால் வாக்குப்பண்ணவேண்டாம். வாக்குப்பண்ணினாலோ என்ன நட் டம்,என்னவசதியீனமிருந்தாலும், சின்னப்பிள்ளைக்கென்றாலும், எளியகூலி க்காரிக்கென்றாலுஞ் சொன்னபடியே நிறைவேற்றவேண்டும்.

கடன்படுவது பொய்வாக்குக்குப் பெருங்காரணம்.

மேலும் ஆயிரம் ரூபாய் சீனமாக மகளுக்குக் கொடுப்பேனென்கிறீர். அவ்வளவு வைத்திருக்கிறீரோ? நான் உழைத்துக்கொடுக்க எண்ணியிருக்கி றேனென்கிறீர். அது நிச்சயமோ? இலாயமகளுமிருக்கிறது, அவளுக்கென் ன செய்வீர்?

மேலும் பணமாகவும் ஆபரணமாகவும் இவ்வளவு கொடுப்பேனென்கிறீர். கெருக்கப்பட்டு அப்படி வாக்குப்பண்ணி,பிறகு காசில்லை,ஆதனங்கொடுப் பேனென்கிறீர். அவ்வாக்குப் பொய்யல்லவோ?

விசேஷமாகத் தேவனுக்குப் பண்ணும் வாக்குகள் நிறைவேற்றக்கவன மாயிருக்கவேண்டும். வாக்குப்பண்ணின காரணிக்கையைச் சேர்க்கிறவனு க்கு இன்றைக்கு இல்லே, நாளைக்கு வாவென்று ஒருபொழுதுஞ் சொல்ல வேண்டாம். மல்கி. 3 : 8, 9 ஐயும் பார்க்க.

(2) கொடுக்கல் வாங்கல் இவைகளில் கவனமாயிருக்கவேண்டும்.

விற்கிறபொருளைப் புகழ்தல், விலையைக்கூட்டுதல், அளவைக்குறைத்தல்; வாங்கும் பொருளே இகழ்தல், விலையைக்குறைத்தல், அளவைக்கூட்டுதல்; இவைகளைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

(3.) சொந்தத் தப்பிதங்களே மறைப்பதிலும் பொய்யுண்டாகும்.

மறைக்கவேண்டியதைச் செய்யப்படாது. செய்தாண்டானால் தாரான மாய் அறிக்கையிடும். நீதி. 28 : 13.

(4.) மற்றவர்களுடைய தப்பிதங்களைத் தூற்றுதலிற் பொய்யில்லாமற் போகாது.

மற்றவர்களைப்பற்றிய கதைகளே மறுதலியாமல் உற்றுக்கேட்பதினாலும் பொய்க்குச் சம்மதிக்கிறோம்.

(5.) முகஸ்துதியும் பெரும்பாலும் பொய்யாகும். நீதி. 29 : 5. 26: 28.

(6.) சண்டையுண்டானால், மற்றப்பக்கத்தார் தெரிவிக்கக்கூடிய சம்ப வங்களைச் சொல்லாமல் விடாதேயும்.

(7) சுருக்கமாகச் சொல்லுதில், வாக்கும் கடையும், உள்ளான கருத்து க்கும் தோக்கத்துக்கும் ஏற்றதாகவும், உடையும் பூஷணமும், உள்ள நிலை மத்துக்கு ஏற்றதாகவும், வஞ்சனையும் வேஷமுமில்லாமலிருக்கும்படி தெ ணடிக்கவேண்டும்.

ஒரு நிஜஸ்தன் என்ன கேரிட்டாலும், பொய்யுஞ்சொல்லான், வஞ்சனை யும் பண்ணுனென்று எல்லாரும் நினைக்கத்தக்கதாயிருந்தால், அது கிறிஸ்து மார்க்கத்தின் உண்மைக்கு எவ்வளவு பெலப்பான அத்தாட்சியாயிருக்கும். இதமாத்திரமல்ல:

உண்மையுள்ளவர்களுக்கு அதிக பலன் உண்டாகும்.

(1.) தேவனுக்குப் பிரியமுள்ளவர்கள். சங். 15.
(2.) தேவனுக்கொப்பானவர்கள். உபா. 32 : 4. சங். 146 : 6. எபி. 6 : 18.
(3.) அவர்கள் தேவனுடைய சந்ததியார். ஏசா. 63 : 8.
(4.) இரட்சாதாருக்கொப்பாவார்கள். 1 பேது. 2 : 22.


பொய்யருக்கோ பெருந்தண்டனைவரும்.

(1.) தேவனுக்கு வேறுப்பாவார்கள். நீதி. 12 : 22.
(2.) அவர்கள் பசாசுக்கொப்பான அவனுடைய சந்ததியார். யோவா. 8 : 44. அப்போ. 5 : 3.
(3.) இவ்வுலகத்திலுங் தண்டனைக்குத் தப்பார்கள் மற்ற உலகத்திலும். நித்திய நாசமடைவார்கள். நீதி 12 : 19; 19 : 9. வெளி. 21 : 8; 22: 15. காணிக்கையை இச்சித்துப் பொய்சொன்னவர்களின் தண்டனையை 2 இரா. 5 : 26, 27. அப். 5 : 1–6ம் பார்க்க.

(வெளிப்படுத்தப்பட்ட வாக்கியத்தில் "எவ்விதப்பொய்யரும்" "பொய்யையிரும்பி அதற்கேற்றதைச் செய்கிறவரும்" என்னுஞ் சொற்களைக் கவனிக்கவும்)

முடிவுரை.

(1.) சத்தியம் உமக்கு இறுக்கிக் கட்டப்பட்ட இடைக்கச்சைபோலாக வேண்டும். எரேமி. 6 : 14.
(2.) தேவனே என் வாயினிடத்தில் காவலை வையும், என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும். (சங். 141 : 3.) என்று இடைவிடாமற் தேவனுடைய உதவியைத் தேடவேண்டும்.



LORD LAWRENCE AND INDIAN MISSIONS.

லாறென்ஸ்அதிபரும் இந்திய மிசியோன்களும்.

உலகமெங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்களென்று [illegible] மூர்த்தியாகிய நித்தியாதார் திருவாய்மலர்ந்தருளிய கற்பனை [illegible] இருந்தொண்டுபுரியும்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட மிசியோ [illegible] மற்றவர்களும்; சேவனே இளைக்கவேண்டிவரினும் எத்தேசத்திலுள்ளோ [illegible] தியைக் கூறி அறிவிக்கும் பரோபகார நிறைந்த [illegible] வர்களும்; குரியோதயம்போன்ற சுவிசேஷ [illegible] பெற்றுக்கொண்ட மேலான கண்மை [illegible] விசேஷ செயத்தைக்குறித்து அறிக்கை [illegible] சத்தியமென்று அபத்தமான பொய் [illegible] னோர் காயுஞ் சரி காவியுஞ்சரியென் [illegible] சமயத்தையும் ஒரேதண்மையாய் [illegible] நிஷ்தமார்க்கம் சேர்ந்திராத வே [illegible] லனை சைவசமயங்களைப் பற்றும் மேசுவை [illegible]

விருத்தியடையுமாவென்ற சொல்லுபவர்களும்; எமது தேசமாகிய யாழ்ப்பாணத்திலும் உள்ளென விளங்குகின்றது.

இப்படிப்பட்டவர்களுடைய மயக்கம் அகலும்படி இந்து தேசம் முழுவதற்கும் பிரதிகாவலரான மகிமைதங்கிய (Lord Lawrence)வாறென்ஸ் அதிபர் (Times) றைம்ஸ பத்திரிகையிற் பிரசுரஞ்செய்வித்த கடிதப்பிழம்பை பின்னல் மொழிபெயர்த்துத் தருகின்றோம்

"ஐயாவே,

மிகியோன் திருத்தியத்தின் நிலையைக்குறித்த சாதாரண விஷயம் என்னிலும்பார்க்க அக்காரியத்தில் அதிக அறிவுடையோருக்குரியதாயினும் எமது இந்திய இராச்சியவிருத்தியோடு சம்பந்தப்பட்ட அளவில் நான் சில கவனிப்புகளைச் சொல்வது தகுதியுடையதென்றுணருகின்றேன். இந்தியாவில் மிகியோன் திருத்தியத்தை நானே கண்டறிந்திருக்கின்றேன். மகமதியர் தாக்கள் வெற்றிகொண்ட மற்றும் தேசங்களிலுள்ள சனங்களோடதற்கம் மார்க்கத்தைத் தள்ளி மகமதீயமதமாகச்செய்தார்களென்பதையும்; இந்தியரையோ எண்ணூறு வருடகாலமாய் மகமதியர் அரசாண்டுவந்தாலும் அவர்களை தமது மதத்தை ஏறெறும்பாலவேனும் சாதித்துவந்தார்களென்பதையும்; தமது எண்ணம் பழக்கம் வழக்கமெல்லாவற்றையும் உருமாறிக்கொண்ட மதத்தானினுல், (Delhi) தெல்லிமாநகர மகமதிய சக்கரவர்த்திகள் வெள் பட்டயத்தல் சங்கரித்து உபத்திரவப்படுத்தினும், மற்றவர்கள் உலகநயங்காட்டி மதப்படுத்தினும், எமது சமயத்தைவிட லில்லியென்பதையும்; இந்தியாவில் மிகியோன் திருத்தியம் விருத்தியாகவில்லையென்றெண்ணுகிறவர்கள் அவதானித்துக் கொள்ளவேண்டும்.

இந்தியாவிற் சாதாரணமாய் மிகியோன் திருத்தியம் 1813 ம் ஆண்டின்பின்னே ஆரம்பித்ததென்பதையும், இப்போதும் அனுப்பப்படும் குருமாரின் தொகை மிகக் குறைவென்பதையும், வேறுசமயகாலங்களிலும் மத்தியஸ்தானங்களிலும்மாத்திரமே அவர்கள் பெரும்பான்மையாய் தொழில்புரிகிறார்களென்பதையும், அவைகளிலும் ஒரேயொருவர் தனியே தேவஊழியம் நடப்பிக்கும் ஸ்தானங்கள் பலவென்பதையும், மனதில் அவதானித்தால்; இந்தியாவில் வேலைக்காரர்கள் அறபதுவருடக்காலத்துள் முற்றும் அகற்றப்படுமெனக் காத்திருக்க இடமில்லையே. இந்துமதம் சனங்களின் கருணத்தை அதிகமாய் இளக்கின்றதென்பதைக் காட்டும் தகுதற்ற சுறிப்புகள் ஏராளமாயிருக்கலாமென்பது அதிசயம்! முதற்கட்டளைபிறக்கவுடன் அரண் ஒப்புக்கொடுக்கப்படுமெனக் காத்திருக்கலாகாது. ஆனல் தேவாளுக்கிருக்கினல் கால வரையில் அநுதகர்த்தெதியப்படுமென்பதை நிச்சயமாகக் காத்திருக்கலாகும். இந்தியாவின் இக்காலவல்லபத்தில் சுவிசேஷ ஊழ்சாசத்தியங்களைச் சன வகைஞர்க்குப் போதிக்கவேண்டுமென்பது மிகவும் அவசியம்.

ஆனல் மிக அற்பசனங்கள்மாத்திரமே மிகியோன்களாலுண்டாயினென்று நீவிர் சொல்லுவீராகினும், இது உண்மைதானு? சமூகிகத் தொழிலின் காரியசித்தியை அளவிடுதல் அரிது. ஆத்மாவுக்குரிய தாழிலின் காரியசித்தியை அளவிடுதலோ அதிலும் அரிது. பொருளுக்குரிய தொழில்களினல் நின்று ஆழமற்ற ஆராய்வுக்கும் தெளிவாய்த்தோற்றும் மற்றவைகளோ அப்படியல்ல. ஒருவன் ஆழமாய் ஆராய்ந்தாலேயன்றி, அத்தொழிலுக்காளாரோரை அறிந்தாலேயன்றி, அவர்கள் மனதிலும் கடையிலும் விலைபோகத்தக்க பலாபலன்களை அளவிடுதல் கூடியதாகாது. இந்தியாவில் மனந்திரும்பச்

Digitized by Noolaham Foundation

லும் உள்ளவர்களையும் சேர்த்தால், மூன்றிலட்சம். ஆனால் மிசியோனரி யர்களுள் வந்த காரிய சித்தியை இத்தொகையினுல் மதித்தல் சற்றுங்காது. கிறிஸ்த சத்தியங்கள் கிறிஸ்த தெரிகளின் பிரபலத்தினுல் பெற்றுக்கொண்ட அறிவினுல், இந்து மகமது மதங்களில் வைத்த நம்பிக்கையெல்லாம் ஒழிந்து மேலான சோக்கங்களினுல் கிளப்பெற்றோராயினும்; தமது சொந்தச்சாதியாரால் தள்ளப்பட்டு நிர்மக்கனென்றிகழப்படுகோமென் அஞ்சித், தம்மிலுள்ளாயை மாறுதலைப் பகிரங்கமாய் அறிக்கையிடாதவர், ஆயிரக்கணக்காய் இந்தியாமுழுவதிலும் பரந்திருக்கிறார்கள். மனந்திரும்பினவர்களின் தொகையை அரசாங்கித்து. சாமிவேலுவெளியேயும் கூறு மார்க்கர்கொண்டையை அறிக்கையிட்டாலும் தாழ்ந்திவரென்று காணத்தக்க காலம்வரைக்குமே, சாதிக்கொண்டாட்டத்துக்குரிய இச்சார்புகள் அவர்களைத் தாமதப்படுத்தும்.

காம்பிரும்பிய அளவாய் கிறிஸ்தவர்கள்தொகை பெருகவில்லையென்பதை ஈான் முன்சுகளில்லை. ஆனல் தலிர்மெய்காரசர ஓர் உத்தம கிறிஸ்தவள். முன் இந்துசமயத்திலிருந்து கிறிஸ்தவளுய (Delhi) தெல்லிமாநகர உபவைத்தியர் இப்பாயிக்கை ஆரம்பத்தில் தான் சாலுய கிறிஸ்தசமயத்தை மறுப்பதிலும் பார்க்கத் தன் வேலைச்சொத்தார் என்பது;உமது பத்திரிகையை வாசிப்போருக்கு ஞாபகமாயிருக்குமே. இந்திய மிசியோன்களில் அபிமானங்கொண்ட இங்கிலிஷ்காரில், இவைபோற்பட்ட இன்னும் அனேக நிஷ்டாசுகளைச்சொல்ல இலகுவர்களில்லை. மினைதங்கிய (Lord Napier) சேப்பியர் அதிபரும் (Sir. Bartle Frere) பார்ந்தில் லிதீறி பிரபலம் மிசியோன் ஸ்தாபகர்களிலுமுணடான பலாபலன்களைக் குறித்தச் சாட்சியிட்டிருக்கிறர்களே.''

மினைதங்கிய லாறென்ஸ் அதிபரின் இக்கழத்தை வாசிக்கும் பிரேதரே நீவிர் கிறிஸ்தவராயின், தமது வார்த்தைக்கு வலைமையையும் செயத்தையும் கொடுக்கும் சத்தரத்தாதியங்கள். நீவிர் சைவராயின், எமது முன்னேருடைய வழுவான தூல்களை முழுவதும் நீக்கிவிட்டு, ஐரோப்பாவைய சாஸ்திரப்படி பூமி கோளவடிவமென்றும், சந்திரருரிய கிரகணங்கள், இராகுகேதுவென்கிற சர்ப்பங்கள் விழுங்குகிறதினுலல்ல, பூமியின் நிழல் மறைப்பதின் நிமித்தமென்றும் கிறிஸ்தவர்களாயினும் மற்றவர்கள் உண்மை மனிதனென்ற இகழ்ச்சொல்லுக்கு ஏதுவாகாமலிருக்க

ரத்தை உணர்ந்துகொள்ளாமையும், தூலிப்பிலி மகாராசா ஆகியோர் அரசினர் மேன்மக்கள் கிறிஸ்தசமயத்தைப் பற்றிக்கொண்டார்களென்று அறிந்துகொள்ளாமையும், தேவசெயம்பெற்றுக் கிறிஸ்துமார்க்கம் இந்தியாவில் பரம்பி வி சயமடைவதினுல் மூன்று இலட்சம்பெயர் சொற்பகாலத்துள் அற்ப ஏதுக்களால் கிறிஸ்தவர்களாயினரென்பதைத் தெளிந்துகொள்ளாமையும், நீவிர் உம்மை வஞ்சித்தற்குக் காரணமாயிருந்தனபோலும். ஆனுல் சகல காலும் கிறிஸ்து தேவனென்று அறிக்கையிடுமென்பதை உணர்ந்து, உங்களை மெய்மேலும் வஞ்சித்துக்கொள்ளாதபடி இரட்சாமூர்த்தியாகிய கிறிஸ்துவண்டை சேருங்கள்.

D. P. N.

ARE THEY SIVITES OR CHRISTIANS !

சைவரோ கிறிஸ்தவரோ?

இங்கிலந்திலும், அமரிக்காவிலுமிருந்த கிறிஸ்தசமயக் குருமார், பரோபகார நிஷ்டையுற்று, இவ்வியாழ்ப்பாணத்தாருக்கு நன்மை பயப்பித்தற்பொருட்டு இவ்விடத்துக்குவந்து, மெய்ச்சமயநூல்களைப் படிப்பித்து மெய்த்தேவலட்சணங்களை உணர்த்தி, அத்தமாவின் பாவநிலைமையைக் காட்டி, தேவநீதி வழுவாமல் அன்பைவிளக்கும் இரட்சிப்புத் தேவமனிதனுகிய யேசுக்கிறிஸ்துவினல் உண்டாயிருக்கிறது என்று அறிவித்தவர, பாவபாரத்தை உணர்ந்து தேவகோபத்துக்கஞ்சிய யாழ்ப்பாணத்தார் அநேகர், நரக யாதனைக்குத் தப்பும்படி தேவனுல்வரும் நீதியைத் தேடிக் கிறிஸ்தசமயத்துட் புகுந்து மனஆறுதல் அடைந்திருக்கிறார்கள். இவர்களுடைய மனப்பாக்கிய நிலைமையையறிந்த மெய்ப்பத்திமான்கள் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தாதிரார்கள். தேவ ஊழியக்காரராகிய கிறிஸ்த குருமாரின் முயற்சிகளையும் மெய்ச்சிக்கொள்ளாதிரார்கள்.

ஆயினும், இத்தேசத்திலுள்ள சிலரால் இப்பாதிரிமார் அனுப்பவும்பட்டார்களே என்று சைவசமயிகளிய லெர் மாயினல் உரைப்பதுமல்லாமல் பத்திரங்களிலும் வரைகிறார்கள். இவர்கள் சொல்வது உண்மையேயாயின் இக்குற்றம ஆருடையது? சைவர்களுடையதோ, கிறிஸ்தவர்களுடையதோ? சைவசமயத்துக்குரியதோ, கிறிஸ்தசமயத்துக்குரியதோ? அனுப்பினவர் கிறிஸ்தவரோ சைவரோ? அனுப்பினவர் "ஒரு கிறிஸ்தவர்" "ஒரு கிறிஸ்தவர்" என்பது, தங்கள்மேல்வந்த அவமானத்தைப் பிறர்மேலெறிய எத்தனித்த அநியாயமாயிருக்கும். இவ்விதமாய் அநியாயஞ்செய்யக் கருதாவிட்டாலும், இத்தீர்ப்புப் பட்சபாதமற்ற தீர்ப்பாயிராது. இது, தீர்ப்புச் செய்தவர்கள் குற்றத்தைத் தங்களுடையதென்றறிகையிட மனமில்லாதவர்களாகவும், நியாயமாயினும் அநியாயமாயினும் மற்றவர்கள்மேற் குற்றம்பாரித்துப் பிரியராகவும் இருக்கிறார்களென்பதைக் காட்டும். ஆராய்வாய்க் கவனித்தால் அனுப்பினவர்கள் சைவரேயெனத் தோற்றும். இதற்கு மூன்று நியாயங்களைக் காட்டுவோம்.

1. முதலாவது, அனுப்பினவர்களின் மனப்பற்று.

இவர்கள் கிறிஸ்த குருமாரிடத்தில் தேவனுன் தம் மதவழக்கப்படி இனனத்தரிக்கர் தங்கள் சைவதமாதினனப் பாராட்டிக் கிரிந்தவர்

நிறுத்தவர்களிடத்திற் சேர்ந்திருந்தகாலத்தில் இவர்கள் "அவர்கள் எதிரே நிறுத்தவர்கள்போலநடித்தும், தங்கள் தங்கள் வீடுகளிலே விபூதிதாரணம், அணுட்டானஞ் செய்துகொண்டும், சைவசமயக் கோவில்களுக்குப் பொருள் கொடுத்தும், அந்தரங்கத்தில் அங்கேபோய்த் தரிசனைசெய்தும், வந்தார்கள்" என்று சைவசமயிகளேசாக்கிறதினாலும், இச்சமயத்தவர்களே இவர்கள் அக்காலத்திலுஞ் சைவசமயப் பற்றுடையவர்களாய் இருந்தார்களெனச் சாட்சியிடுகிறார்கள். இவர்கள் நிறுத்தவர்களே விட்டுப் பிரிந்தபின்னும் வெளியரங்கமாய் விபூதிதரித்துச் சிவாலயங்களுக்குப் போய் அச்சமயமில்லையில் தங்களே ஒத்த சைவரில்லையென்று வீம்புபாராட்டித் திரிகிறார்கள் என்றால், இவர்களுடைய மனப்பற்று எப்பொழுதுஞ் சைவத்தோடே இருந்ததென்று சொல்லவேண்டும். ஆகலாற் றிண்டிதருருமாரை அணுப்பினார்கள் என்று குறிக்கப்படுகிறவர்கள் நிறுத்தவர்களல்ல, சைவரென்றே சொல்ல வேண்டும்.

2. இரண்டாவது, சைவசமயப் போதனைகள்.

இவைகளினலும் அணுப்பினவர்கள் சைவரென்று நிர்க்க இடமுண்டு. மனம்வஞ்சனை சேடாயிருந்தாலும், நோக்கம்எவ்வளவுமாறுபடியிருந்தாலும், செய்யப்படுஞ்சைவசமயக்கிரியைகளும், உச்சரிக்கப்படுஞ் சைவதேவ நாமங்களும், சரீரத்திற்படுஞ் வெண்ணமுதலான சைவபுண்ணியப் பொருள்களும், எவ்வித பாவங்களையுந் தொலைக்கும் என்ற சைவநூல்கள் கூறவதினலும்; செய்திருக்கும் நோக்கத்தால் நிறைவேறிய எவ் மூவுலகாளப் பெற்றதென்றும், அரிசி வசம்பு கூறிலிற்கும்பொருட்டாய் உச்சரிக்கப்பட்ட அரி சிவசம்பு என்னும் நாமங்கள் பாவந்தீர்த்துப் பரகதிசேர்த்தனவென்றும், நாயின்காலிலொட்டிய சாம்பர் பிணத்திற்புரண்ட மகத்துவத்தினுல் இயமகணங்கள் கைப்பற்றிய ஆன்மாவைச் சிவகணங்கள் பறித்துக் கயிலாசபதியிற் கொண்டுபோய்ச் சேர்த்தன என்றும், இவை போன்ற வேறு பலவற்றையும் அந்நூல்கள் கூறி அறிவிப்பதினலும்; (அழமான காரியங்களே ஆராய்ந்தறிந்தோம் என்ற மேன்மைபாராட்டுஞ் சைவதஞ்சமய ஆதாரதூல்களுக்கும் புராணஙடைக்கும் எவ்வளவு விசற்பமன்டென்று கொக்கரித்தாலும்) சாதாரண சைவசமயிகளின் மனதில் இப்புராணங் கேட்டல் முதலான சரிதை கியை நிலைகளுக்குரிய தொழில்களும், புறம்பான இத்தொழில்களேக்குறித்த மட்டற்ற மாட்சைமைபற்றிய வாங்கங்களும், இவைகளின் பலனை ரூபிக்கக்கட்டிய உதாரண கதைகளும் அவர்களுடைய செயல்களினலும் கதைகளினலும் பிரசியட்சமாய்த் தோன்றுகிறபடி, நிறைந்திருக்கின்றமையினலும்; இக்கிலே [illegible] சமயிகள் தாங்கள் யாரை அணுப்பினலும், எவ்வளவு [illegible] சிகாரம்பண்ணினலும், கெனே, பிள்ளையாரே, சுப்புமணியசுவாமியே என்ற காலமாலியிற் கியானிப்பதும், தாங்கள் அந்தரங்க [illegible] வெளியரங்கமாயெனினும் திருநீறு பூசிக்கொள்வதும், கோயிற்பூ [illegible] விழா முதலானவற்றுக்காய்ப் பொருளுதவிசெய்வதும், தங்களைக் காத்துக் கொள்ளுமென்று நம்பி சோமசுந்தரேசுவர முடியாரியர் [illegible] யவர்கள் இச்சைவசமய போதனைகளினல் எவப்பட்டவர்களானதிரும்பாவிட்டால் அழிந்துபோவீர்கள்" என்றும், "பரிசுத்தமில்லாதவனுக்கு தேவனைக்காண்பதில்லை" என்றும் போதிக்கிற இந்தப் போதனைகளினல் எவப்பட்டவர்களல்ல. ஆகவே, அ[illegible]

இக்கியாயத்திலுள்ளும் கிறிஸ்தவர்களல்ல, சைவரென்றே காணப்படும்.

3 மூன்றாவது, முன்மாதிரி.

மூன்மாதிரி அதிகவலிமையுடையது. "பன்றியோடெடிய கன்றும் மலர் தினனும்" என்னும் பழமொழி இதனுலே உண்டாயிற்று. உறவினர், அதிகாரிகள், மதிக்கப்படத்தக்க மேம்பாடுள்ளவர்கள், காட்டும் முன்மாதிரியே விசேஷ வலிமையுடையது. ஆகலால் தவத்திகள் முனிவர்கள் மாத்திரமல்ல, தேவர்களும் பொய்யரென அறிவிக்குஞ்சமயம், அச்சமயவாசகன் சற்றும் அஞ்சாமல் வஞ்சகரான யாவரையும் அணுப்ப வல்லின்றது. மூப்பத்துமூன கோடி தேவர்களுள்ளும் விசேஷம்பெற்ற மும்மூர்த்திகளுக்கு, அவர்களுள் சைவசமயிகளால் விசேஷிக்கப்படும் வினும், பொய்சொன்னார்கள் என்று அறிகிற வைசமயத்தவர்கள் பொய்சொல்ல அஞ்சுவார்களா? பிரமா வினுடைய முடியைத்தேடியும் கண்டுகொள்ளக்கூடாதபொழுது "சீதாதேவியென் வரலின்செய்கையைக், காதலுறுயிரைக் கணத்திலேகடக், தரியான்முடியறிந்தனினேனை, ஓலுஞன் பொய்யை" எனவும்; விட்டுனு தன்வடிவாருள் பொய்சொல்லப்பின்னிட்ட ஒருவனை நோகி, "புல்லிய பொய்யொன்றென்னும் பொருபெரு நெருப்புக்கீழ், மில்லைமற்றொன்றுமெ ன்னு நியம்புக விதனையென்றான்" எனவும், வினுலே "பெண்ணுடன் குகடியினேத்தான் பொய்யைப்பேணி வென்றேனென்றுரைத்தான்" எனவு மறிகிற வெபத்தன் பொய்பே அஞ்சுவானு? இத்தேவர்களே மெய்த் தேவனென்று கம்பினுனென்ன, இவர்கள அவருடைய ஐச்சம்பெற்ற அடியவர்களென்று எண்ணினுமென்ன, இவர்களை வழிபடுகிறவர்கள் இவர்களின் வழியில் நடக்கப பயப்படார்கள். பொய்யை அரோசிக்கமாட்டார்கள். மனிதரை அணுப்பும்படி பொய்சொல்லல் பெரும்பாவமென உணராதார்கள். அசத்தியம்பேசிய இவர்கள் இவ்வித முன்மாதிரியைப் பின்பற்றினவர்களேயல்லாமல் 'எவ்விதப் பொய்யரும் அக்கினியுங் கத்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்றும் "நானே சத்தியம்" என்றுஞ் சொன்னவரும், "அவர் காயிலே வஞ்சனைகாணப்படவுமில்லை" என்ற சாட்சி பெற்றவருமாயிருக்கிற கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றினவர்களல்ல.

ஆதலால் வஞ்சித்தவர்களென்று சொல்லப்படுகிறவர்களின் மனப்பற்றும், இவர்கள எவிய போதனைகளும், இவர்கள் பின்பற்றிய முன்மாதிரியும், கிறிஸ்துசமயத்துக்கல்ல, சைவசமயத்துக்கே உரியன. ஆகையினுல் "ஒரு கிறிஸ்தவர் கிறிஸ்தவரினே வஞ்சித்தார்" "மற்றொருகிறிஸ்தவர் வெபத்தி மகிமையில் மேன்மைபாராட்டித் திரிகின்றார்" என்பதற்குப் பதிலாய் எம் மூர்க் சைவர் இப்படி அகியாயஞ்செய்தார்களே, இந்த அவமானத்தை கீக்க என்னசெய்வோமென்று துக்கித்துப் புலம்புதலே நீதியாயிருக்கும். தங்கும் தத்தை மற்றவர்கள் மேலேற்ற எத்தனிப்பதற்குப் பதிலாய் [illegible] க்களை கீக்குதலே புத்தியாயிருக்கும். இதற்கு மூன்மாதிரி [illegible] னேயும், இச்சனங்களே மோசவழியில் கடத்திய சமயதர் சத்தால் அதற்கிடுதலே தருணியாயிருக்கும். புலமைப் புழு [illegible] தால்களுக்குப் பதிலாய்ச் சுத்தசத்திய சுவிசேஷநூல்களையு ய வெ தேவர்களுக்குப் பதிலாய் எப்பொழுதும் மெய் யேசுவையும் ஏற்றுக்கொள்வதே, இத்தேசத்தவர்களே ஒருபெ த்தில் விழாமற் காக்கும். சத்திய தேவனின் அருளே இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org